REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2023 ஒக்டோபர் 28 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
91

வரு. 91 இல. 256 | Saturday 28, October, 2023 | 10பக்கங்கள் | 50/-

## LIOC நிறுவன உரிமம் புதுப்பிக்க அனுமதி
### 2024 ஜனவரி முதல் நடைமுறைக்கு

எரிபொருள் விநியோக நிறுவனமான லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் உரிமத்தை புதுப்பித்துக்கொள்ள இலங்கை அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான தகவலை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ 06

# கிழக்கில் சகல காணிகளும் சட்டரீதியாகவே விடுவிப்பு
### ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு



## இன, மதவாத அடிப்படையில் அநாவசியமான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கிழக்கு மாகாணத்தின் காணி விடுப்புப் பணிகள் மகாவலி அமைச்சின் கீழ் சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் பணிகள் ஒருபோதும் இன, மத அடிப்படையில் முன்னெடுக்கப்படாதெனவும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

இந்தப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்த முற்படும் மூன்றாம் தரப்பினருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்களெனவும், ஆளுநர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (27) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, ஆளுநர் செந்தில் தொண்டமான் இவ்வாறு உறுதியளித்துள்ளார். இது தொடர்பாக ஆளுநர் மேலும் தெரிவித்த போது,

"கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு, திவுலபத்தன பகுதியில் யுத்தத்துக்கு முன்னர் வசித்த மக்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அங்கு வந்து படிப்படியாக குடியமர ஆரம்பித்துள்ளனர். அம்மக்கள் விவசாயிகள் மற்றும் கால்நடை விவசாயிகளென இரு குழுக்களாக இருப்பதால் அப்பகுதி மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது.

மயிலத்தமடு பகுதியில் மீளக்குடியமரும் போது, பொலன்னறுவை மற்றும் அம்பாறையைச் சேர்ந்த பலரை மேலதிகமாக அழைத்து வந்தமையால், 06

### கட்சி ஜனநாயக அரசியல் வேறுபாடுகளை மறந்துவிட்டு
## புதிய நாடு, புதிய பொருளாதாரம், புதிய அரசியலை கட்டியெழுப்புவோம்
### சகல அரசியல்வாதிகளையும் ஒன்றுபட ஜனாதிபதி அழைப்பு



கட்சி ஜனநாயக அரசியலுக்குள் காணப்படும் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்கவைத்துக்கொண்டு புதிய நாடு, புதிய பொருளாதாரம் மற்றும் புதிய அரசியலை கட்டியெழுப்பும் பணியில் சகல அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06



03
சர்வதேச பொலிஸ் தடைசெய்த பாஸ்போர்ட்டுடன் வருகை;
### விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்ட சீனப் பெண்

### இரண்டாகப் பிரிந்தது உறவுகளின் சங்கம்
## வவுனியா நகரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க கூட்டத்தில் கைகலப்பு
### சங்கத் தலைவி உட்பட 07 தாய்மார் கைது



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க கூட்டத்தில் தாய்மார்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு காரணமாக 7 பேர் வவுனியா பொலிஸாரால் நேற்று (27) 06

### அத்தியாவசிய மருந்து விநியோகம்
## கொடுப்பனவுளை செலுத்த ரூ. 5.6 பில். திறைசேரி ஒதுக்கீடு



நாட்டில் மருந்து விநியோகத்துக்கான அத்தியாவசிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக திறைசேரியிலிருந்து 5.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த இரண்டு மாதங்களுக்கு 06

## KKS ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ்
### குத்தகை தொடர்பாக இதுவரை முடிவில்லையென தெரிவிப்பு



**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

ஜனாதிபதி மாளிகையை தனியார் பல்கலைக்கழகத்துக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஊடகச் செய்திகள் வெளியாகியுள்ள 06

## ரயில் மோதி இரு யானைகள் உயிரிழப்பு
### வவுனியாவில் இரவில் சம்பவம்



வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் 15 மற்றும் 20 வயதுடைய இரண்டு காட்டு யானைகள் நேற்றுமுன்தினம் ரயில் மோதி உயிரிழந்துள்ளன. தலைமன்னார் நோக்கிப் பயணித்த ரயில் மோதியே இந்த யானைகள் உயிரிழந்துள்ளதாக, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் 06

## 18 ATM களிலிருந்து ரூ. 1 கோடி மோசடி
### கடுவெலவில் இருவர் கைது

வங்கிப் பணப்பரிமாற்றம் செய்யும் ATM இயந்திரத்தினூடாக சுமார் ஒரு கோடி ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேகநபர்கள் இருவரை கைது செய்துள்ளதாக, கடுவெல பொலிஸார் தெரிவித்தனர்.




18 பொலிஸ் பிரிவுகளிலுள்ள வங்கிகளுக்குச் சொந்தமான 06



03
### பலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டும்
அமைச்சர் ஜீவன் தொண்டமான்

### இஸ்ரேல் யுத்தத்தில் பலியான
## இலங்கை பெண்ணின் உடல் நாட்டுக்கு!
### கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது




இஸ்ரேல் ஹமாஸுக்கு இடையிலான யுத்தத்தில் பலியான அனுலா ரத்நாயக்க எனும் இலங்கை பெண்ணின் சடலம் இன்று இலங்கைக்கு கொண்டு வரப்படுவதுடன், இதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், இஸ்ரேலிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித்தது. 06



03
### யாழில் Gas சிலிண்டர்களை நூதனமாக திருடிய இருவர்
CID பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

# கொழும்பில் பாரிய தீ விபத்து
### 06 பேருக்கு தீக்காயம், 23 பேர்வரை பாதிப்பு
### பல மணிநேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள்!



கொழும்பு, புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அடுக்கு மாடிக் கடைத்தொகுதியொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தை தொடர்ந்து, தீக்காயங்களுடன் 23 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 7 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் முயற்சியில் 06



### சட்டவிரோதமாக தங்கியிருந்த குற்றச்சாட்டு;
## குவைத்திலிருந்து 28 இலங்கையர் நேற்று நாடு கடத்தப்பட்டனர்



குவைத்தில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக தங்கியிருந்து பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வந்த இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணியாளர்கள் 28 பேர் நேற்று (27) காலை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கைக்கு வருவதற்காக குவைத்திலுள்ள 06

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 50 Kg கடலட்டை பறிமுதல்
### தனுஷ்கோடியில் ஐவர் அதிரடியாக கைது




**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு கடந்தப்படவிருந்த 50 கிலோகிராம் கடல் 06

### வன்முறை, இன, மத வெறுப்புணர்வு தூண்டல்;
## அம்பிட்டிய தேரர் குறித்து IGPக்கு சுமந்திரன் கடிதம்

**யாழ். விசேட நிருபர்**



வன்முறை மற்றும் இன, மத வெறுப்பு உணர்வை தூண்டுவதை நோக்கமாகக்கொண்டு அம்பிட்டிய சுமண தேரரால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பாக பொலிஸ் மாஅதிபருக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் 06

### தமிழ் மக்களை அச்சுறுத்தி வரும்
## அம்பிட்டிய தேரரை கைதுசெய்ய வேண்டும்
### மனோ MP காரமான அறிக்கை



தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்களால் நடுத்தெருவுக்கு வந்து கதறும் மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின தேரரை ஒன்றில் *International Covenant on Civil and Political Rights* சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அல்லது மனநல காப்பகத்தில் சேர்க்க வேண்டுமென, தமிழ் முற்போக்கு கூட்டணியின் 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

# போர் விமானங்களுடன் இஸ்ரேலின் தரைப்படை மத்திய காசாவுக்குள் ஆழ ஊடுருவி தாக்குதல்

## தரைவழி தாக்குதலுக்கு ஒத்திகை: உயிரிழப்பு அதிகரிப்பு

இஸ்ரேலிய தரைப்படை போர் விமானங்களின் உதவியோடு நேற்று (27) காசாவுக்குள் ஆழ ஊடுருவியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்புக்கு எதிராக காசாவில் தரைவழி தாக்குதலுக்கு தயாராகி வரும் இஸ்ரேல் தொடர்ந்து இரண்டாவது நாளாகவே காசாவுக்குள் படைகளை அனுப்பியுள்ளது.

இந்தப் போர் 21 நாட்களைத் தொட்ட நிலையில் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்று இடைவிடாது தொடர்ந்தது. மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஐரோப்பிய தலைவர்கள் அழைப்பு விடுத்தபோதும் இஸ்ரேல் தனது தாக்குதல்களில் இருந்து பின்வாங்காது நாளுக்கு நாள் அதன் தீவிரத்தை அதிகரித்து வருகிறது.

காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 7000ஐ தாண்டி வேகமாக அதிகரித்து வருகிறது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் காசா மீதான தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் ஆரம்ப நாட்களில் தினசரி 200 தொடக்கம் 300 பேர் வரை கொல்லப்பட்டு வந்த நிலையில் தற்போது நாளொன்றுக்கு 700க்கும் அதிகமானோர் கொல்லப்படும் அளவுக்கு மோசடைந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்திற்குள் 400க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்திருந்தது.

காசாவில் இஸ்ரேல் முழு முற்றுகையை கடைப்பிடித்து வரும் சூழலில் அங்கு மனிதாபிமான நெருக்கடியும் மோசமடைந்துள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இதுவரை அந்தப் பகுதியில் எகிப்துடனான ரபா எல்லை வழியாக 74 உதவி லொறிகள் நுழையவே அனுமதி கிடைத்துள்ளது. எனினும் இவை போதுமானதாக இல்லை என்று உதவிக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன. மோதல் வெடிப்பதற்கு முன்னர் தினசரி காசாவுக்கு சுமார் 500 லொறிகள் சென்றதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

காசாவில் இருக்கும் 35 மருத்துவமனைகளில் 12 மூடப்பட்டிருப்பதோடு எரிபொருள் தீர்ந்து வரும் நிலையில் தமது செயற்பாடுகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளால் மக்கள் விரைவில் மரணிக்க ஆரம்பிப்பார்கள் என்று ஐ.நா எச்சரித்துள்ளது. “காசா மக்கள் குண்டுகள் மற்றும் தாக்குதல்களால் மாத்திரம் உயிரிழப்பதில்லை. காசாவில் நிலவும் முற்றுகையின் விளைவால் மேலும் பலர் உயிரிழப்பார்கள்” என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசாரினி தெரிவித்துள்ளார்.

காசா எல்லையில் ஆயிரக்கணக்கான துருப்புகளை குவித்து வைத்திருக்கும் இஸ்ரேல் மத்திய காசா மீது குறுகிய காலத்திற்கு தரைவழியாக ஊடுருவிச் சென்றது. போர் விமானங்கள் மற்றும் ஆயுதமற்ற விமானங்களின் உதவியோடு தரைப் படை மத்திய காசாவில் கூடுதல் இலக்குகளில் சுற்றிவளைப்புகளை நடத்தியது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட கறுப்பு வெள்ளை படத்தில் கவச வாகனத் தொடரணி ஒன்றும் தாக்குதல் ஒன்றுக்குப் பின்னர் வானில் பெரும் புகைமூட்டம் எழுவதும் தெரிகிறது.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகார் கூறும் போது, ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் அடுத்த கட்டப் போருக்கு தயாராவதற்காக இஸ்ரேல் பாதுகாப்பு படைகள், வரும் நாட்களில் காசாவில் பீரங்கி தாக்குதல்களை தொடரும் என்றார்.

இந்நிலையில் ஹமாஸின் மேற்குக் கான் யூனிஸ் படைப் பிரிவின் தளபதி மிதாத் மபஷரை தமது படையினர் கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக அது கூறியது.

இதேவேளை போர் நிறுத்த உடன்பாடு ஒன்று எட்டப்படும் வரை மேலும் பணயக்கைதிகளை விடுவிப்பதை நிறுத்தி வைத்திருப்பதாக ஹமாஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் அதிகாரியான அபூ ஹமீதை மேற்கோள்காட்டி ரஷ்யாவின் கமர்சன் பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி கடத்தி வரப்பட்ட இந்தப் பணயக்கைதிகள் இருக்கும் இடத்தை அடையாளம் காண்பதற்கும் காலம் தேவைப்படுவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் 229 பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய தலைமை இராணுவ பேச்சாளர் டானியல் ஹகரி தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பு இதுவரை நான்கு பணயக்கைதிகளை விடுவித்துள்ளது. ஹமாஸ் பிரதிநிதிகள் ரஷ்யா விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்திருக்கும் நிலையில் இஸ்ரேலிய படையினரால் நேற்று (27) மேலும் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஜெனின் பகுதியில் மூவரும், கல்கிலியாவில் ஒருவரும் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி மோதல் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது. இதனால் அங்கு சராசரியாக மாதாந்தம் கொல்லப்படும் பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேலின் வடக்கு எல்லையில் கடந்த மூன்று வாரங்களாக ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இராணுவத்திற்கு இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இஸ்ரேலுடனான லெபனான் எல்லையில் ஒன்றுக்கு மேற்பட்ட வெடிப்புகள் பதிவாகியுள்ளன.

வடக்கு இஸ்ரேலுக்கு ஹிஸ்புல்லா போராளிகள் ஊடுருவி தாக்குவதை தவிர்ப்பதற்கு இஸ்ரேல் படைகள் மரங்கள், புதர்களுக்கு தீ வைத்து அழித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறுபுறம் இஸ்ரேல் எல்லைக்கு அருகில் இருக்கும் எகிப்தின் டாபா நகரில் இடம்பெற்ற ஏவுகணை தாக்குதல் ஒன்றில் ஆறு பேர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் அம்பூலன்ஸ் நிலை ஒன்று மற்றும் காசா மருத்துவமனை நிர்வாகத்திற்குள் இருக்கு கட்டிடம் ஒன்றில் ஏவுகணை விழுந்ததாக கூறப்பட்டுள்ளது.





## பைடனுக்கு பதில்:

# உயிரிழந்தோர் பட்டியலை வெளியிட்டது பலஸ்தீன்



இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கேள்வி எழுப்பியதை அடுத்து நேற்று முன்தினம் வரை கொல்லப்பட்ட 7,028 பேரின் பெயர் பட்டியலை பலஸ்தீன சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.


வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய பைடன், காசா தரப்பு வழங்கி இருக்கும் உயிரிழப்பு எண்ணிக்கையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் காசா சுகாதார அமைச்சு 210 பக்கங்கள் கொண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கொல்லப்பட்டவர்களின் பெயர், வயது, பால் மற்றும் அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிர்வாகம் மனிதத் தரங்கள், தார்மீகங்கள் மற்றும் அடிப்படை மனித உரிமை பெறுமானங்களற்ற வகையில் உயிரிழப்பு எண்ணிக்கையை வெட்ககரமான முறையில் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த அறிக்கையில் கூறப்பட்டதை விடவும் உயிரிழப்பு எண்ணிக்கைய அதிகமாக இருக்கக் கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈரான் ஆதரவு குழுக்களுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல்



சிரியாவில் ஈரான் இஸ்லாமிய புரட்சிப் படை மற்றும் ஈரான் ஆதரவுக் குழுக்கள் பயன்படுத்தும் இரு நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றதை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

“அமெரிக்கா மோதலை எதிர்பார்க்கவில்லை என்பதோடு மேலும் மோதலில் ஈடுபடவும் திட்டமிடவில்லை.

எனினும் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான ஈரான் ஆதரவு தாக்குதல் ஏற்க முடியாதது மற்றும் நிறுத்தப்பட வேண்டும்” என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின் வியாழக்கிழமை (26) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க மற்றும் கூட்டணிகள் மீது ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்களால் இந்த மாதத்தில் குறைந்தது 16 தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 21 அமெரிக்க இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் வெடித்ததை அடுத்தே பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவத்தை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

“தற்பாதுகாப்புக்காக குறுகியதாக வடிவமைக்கப்பட்ட இந்த தாக்குதல்கள், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க துருப்புகளை பாதுகாப்பது மட்டுமே நோக்கமாக இருந்தன” என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அமெரிக்க துருப்புகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கொமைனிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 18 பேரைக் கொன்ற நபரை தேடி சல்லடை



அமெரிக்காவின் மெய்ன் மாநிலத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் சந்தேக நபரைத் தேடும் பணியை பொலிஸார் விரிவுபடுத்தியுள்ளனர்.

காடுகள், சிறிய நகரங்கள் என மாநிலத்தின் தெற்குப் பகுதி முழுக்க அதிகாரிகள் சந்தேக நபரைத் தேடுகின்றனர்.

இந்த சம்பவத்தில் 18 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 13 பேர் காயமுற்றனர். அவர்களில் மூவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

சம்பவம் நடந்த லெவிஸ்டன் நகரிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நகரங்களில் உள்ள கடைகள், பாடசாலைகள், மருந்தகங்கள் முதலியன மூடப்பட்டுள்ளன. சம்பவ இடத்திற்குச் செல்லும் வீதிகளை பொலிஸார் மூடியுள்ளனர்.

சந்தேக நபரான 40 வயது ரொபர்ட் கார்ட் துப்பாக்கி சுடப் பயிற்றுவிக்கும் சான்றிதழ் பெற்றவர் என்றும் அமெரிக்க இராணுவத்தின் போர்க் காலப் படைவீரர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கார்ட் மனநலச் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

# இம்ரானுக்கு பிணை மறுப்பு



சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை பிணையில் விடுவிக்க இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

அரசாங்க இரகசியங்களைக் கசியவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் இம்ரான் கானுக்கு பிணை வழங்கப்படாததை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் என்று அவரது வழக்கறிஞர் ‘எக்ஸ்’ சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டார்.

கடந்த 2022ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து பாகிஸ்தான் தூதர் ரகசியமாக அனுப்பிய கம்பிவடத் தகவலை பிரதமர் என்ற முறையில் அந்த ரகசியத்தைப் பாதுக்காக்காமல் பொதுவெளியில் அம்பலப்படுத்தியதாக கான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ரத்து செய்யுமாறும் கானுக்கு பிணை வழங்குமாறும் தாக்கல் செய்த மனுக்களை உயர் நீதிமன்றம் ரத்து செய்துவிட்டதாக அவரது வழக்கறிஞர் நயீம் பாஞ்சதா தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் இருந்த கானுக்கு எதிராக பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் 2022ஆம் ஆண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அவர் பதவியிலிருந்து விலகினார்.

பின்னர், லஞ்ச ஊழல் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

# சீனாவின் முன்னாள் பிரதமர் காலமானார்



சீனாவின் முன்னாள் பிரதமர் லி கெச்சியாங் தனது 68ஆவது வயதில் காலமானார்.

மறைந்த லி அண்மைக் காலமாக ஷாங்ஹாயில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்ததாகச் சீனாவின் சிசிடீவி ஊடகம் தெரிவித்தது.

கடந்த வியாழக்கிழமை (26) லிக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாகவும் சிகிச்சைப் பலனளிக்காததால் நள்ளிரவு வாக்கில் அவர் உயிர் பிரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மறைந்த லி ஜனாதிபதி ஷி ஜின்பிங் தலைமையில் சீனப் பிரதமராகவும் சீன அமைச்சரவைத் தலைவராகவும் பத்தாண்டுகள் பணியாற்றியவர்.

பிரதமர் பொறுப்பில் இரண்டாம் தவணை நிறைவடைந்ததும் இந்த ஆண்டு மார்ச் மாதம் லி பதவி விலகினார்.

1955ஆம் ஆண்டு அன்ஹுய் மாகாணத்தில் பிறந்த லீ கெகியாங், ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகத் தொடங்கி அரசியலில் நுழைந்தார். அவர் மாகாண பதவிகள் மற்றும் அமைச்சகங்களில் பணியாற்றிய பின் 2007இல் கட்சியின் மத்திய குழுவில் சேர்ந்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 28 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.53
இஷா - 07.04

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஐப்பசி 11

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# 2022 இல் ஏற்றுமதி வருமானமாக 13.1 பில். அமெரிக்க டொலர்கள்

## வரலாற்றில் முதல் தடவையாக அதிக வருமானம்

இலங்கையில் கைத்தொழில் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 1% பகுதியை கைத்தொழில் துறைக்காக ஒதுக்குவதே தமது இலக்கென, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை எமது நாட்டின் வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானமாக ஈட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்ததாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண,

"கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய என்ற வேறுபாடின்றி தொழில் முயற்சியாளர்கள் உட்பட அனைவரும் எமது நாட்டின் உற்பத்திகளை அதிகரிக்க தம்மால் இயலுமானளவில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பாக, எமது நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அமுலிலிருந்த காலத்தில், தேசிய உற்பத்திகளை அதிகரிக்கவும் அதேபோன்று, ஏற்றுமதியை உயர்த்தவும் எமது நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள் தமது பங்களிப்புகளைச் செய்துள்ளனர். இதன் மூலம் 2022ஆம் ஆண்டு எமது நாட்டின் வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானமாக 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.



இலங்கையில் கைத்தொழில் துறைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக எமது நாட்டு கைத்தொழில் துறை போதியளவு முன்னேற்றம் அடையவில்லை. இதனை அதிகரிக்க தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 1 % சதவீதத்தையேனும் கைத்தொழில் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்பதே எமது இலக்காகும்.

நாம் ஏற்கெனவே 3 புதிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். களுத்துறை மாவட்டத்தின் மில்லெனிய, காலி மாவட்டத்தின் எல்பிடிய, கண்டி மாவட்டத்தின் பொத்தபிடிய ஆகிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், கைத்தொழில் துறையின் மேம்பாட்டுக்கு நிதி ரீதியிலான ஒத்துழைப்புகளை வழங்கக்கூடிய வகையில் போதிய நிதி நிறுவனங்கள் எமது நாட்டில் இல்லாமை ஒரு பாரிய குறைபாடாக உள்ளது. எனவே, அதனை நிவர்த்தி செய்ய கைத்தொழில் அபிவிருத்தி சபையினூடாக பல்வேறு கடன் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம்.

அதேபோன்று, எமது நாட்டு கைத்தொழில் துறையினர் எதிர்கொள்ளும்மற்றுமொருபிரச்சினையே கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொள்வது தொடர்பாகவுள்ள சிக்கலான நிலைமை. பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்று அதிகளவிலான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன், அதிக காலத்தை இதற்காக செலவிட வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. இது புதிய தொழில் முயற்சியாளர்களை விரக்தி அடையச் செய்கின்றது. எனவே, எமது நாட்டின் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அனுமதி பெறல் தொடர்பான விடயத்தை இலகுபடுத்த அவசியமான பணிகளை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கையின் கைத்தொழில் துறை அபிவிருத்திக்கான தேசிய கொள்கை (NAPID) தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய கொள்கை கட்டமைப்பில் (20232048) இணைத்துக்கொள்ள பொருளாதார ஸ்திரப்படுத்தல் புத்தெழுச்சி மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான குழு தீர்மானித்துள்ளது.

06

பொதுமக்களின் காணியை அபகரித்து கட்டிய

# ஜனாதிபதி மாளிகையை தனியாருக்கு வழங்கியது எப்படி?

## அரசாங்கத்திடம் சுமந்திரன் MP கேள்வி



பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகைக் கட்டடத்தை உரிய நடைமுறைகள் மற்றும் அனுமதிகள் பெறப்படாது எவ்வாறு தனியாருக்கு வழங்க முடியுமென்று, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இந்தச் செயற்பாடு முழுக்க முழுக்க தவறு. யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு கீரிமலையில் கட்டப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை உரிய முறையில் அனுமதிகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படாது கட்டப்பட்டுள்ளது.

இந்தக் காணிகள் பொதுமக்களுக்கு சொந்தமாக உள்ளது. அவ்வாறான நிலையில் பொதுமக்களுக்கு அறிவிக்காது, காணிகளை அடையாளம் காணாது, எவ்வாறு கையகப்படுத்த முடியும்? முறையாக காணிகள் அளவீடுகள் செய்யப்படவில்லை.

அவ்வாறான நிலையில் எவ்வாறு தனியாருக்கு ஜனாதிபதி மாளிகையெனக் கூறப்படும் கட்டடத்தை வழங்க முடியும். இந்த விடயம் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, புலம்பெயர் முதலீட்டாளர்கள் மத்தியிலும் தவறான புரிதல் ஏற்படுத்தக்கூடும்.

வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண சபை அமர்வுகள் நடைபெற்ற காலத்திலேயே இந்தக் கட்டடம் வடமாகாண சபைக்கு கையளிக்கப்பட வேண்டுமென்று ஏகமனதான தீர்மானம் எடுத்து, அது உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தமை அனைவரும் அறிந்ததே.

இதேவேளை, இந்தக் கட்டடத்தை வடமாகாண சபைக்கு வழங்கா விட்டால், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு வழங்குமாறு கேரியிருந்தோம். ஆனாலும், இது எதுவும் பின்பற்றப்படவில்லை" என்றார்.

மேலும், இந்தக் கட்டட விவகாரம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அறிவிக்காது, எவ்வாறு இதனை நடைமுறைப்படுத்த முடியுமென்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

06

# கொழும்பு, புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெருவில் பாரிய தீ விபத்து







படங்கள்:- சுதத் நிஷாந்த



கண்டி மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்க தேரரிடம் தனது 'அசோக வதன' எனும் நூலின் முதலாவது பிரதியை இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நேற்று வழங்கியுள்ளார். 'அசோக வதன' நூல் தொடர்பாக ஞாயிறு தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச பொலிஸ் தடைசெய்த பாஸ்போர்ட்டுடன் வருகை;

# விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்ட சீனப் பெண்

சர்வதேச பொலிஸார் தடைசெய்த கடவுச்சீட்டுடன் நேற்று முன்தினம் (26) இரவு வருகை தந்த குற்றச்சாட்டில் 53 வயதுடைய சீனப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு, உடனடியாக நாடு கடத்தப்பட்டார்.

களவாடப்பட்ட மற்றும் காணாமல் போன கடவுச்சீட்டு தரவு தளத்தில் சர்வதேச பொலிஸாரால் பட்டியலிடப்பட்ட கடவுச்சீட்டுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை இவர் வந்தடைந்த போதே, குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.



சீனாவின் குன்மிங்கிலிருந்து சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் MU213 எனும் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை இவர் வந்தடைந்த போது, சர்வதேச பொலிஸாரால் பட்டியலிடப்பட்டுள்ள கடவுச்சீட்டு தரவு தளத்தில் அவர் வழங்கிய கடவுச்சீட்டு இடம்பெற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டதை அடுத்தே, இச்சீனப் பெண் கைது செய்யப்பட்டார்.

06

# பலஸ்தீனத்தில் விரைவில் அமைதி திரும்ப வேண்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



பலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டுமென்பதே தனது எதிர்பார்ப்பென்பதுடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலையை காணும் போது கவலையளிப்பதாகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பலஸ்தீன தூதரகத்துக்கு சென்றிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட்டை சந்தித்துக் கலந்துரையாடினார்.

06

# டுபாயிலுள்ள ஹீனடியேன மகேஷின் சகா 'அபித்தியா' பொலிஸாரால் அதிரடியாக கைது

## நபர் ஒருவரை கொலை செய்துவிட்டு நாட்டை விட்டு தப்பிச் செல்வதே திட்டம்

நபர் ஒருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டை விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், சந்தேகநபரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, துப்பாக்கி, போலிக் கடவுச்சீட்டு மற்றும் 5 580 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பலைச் சேர்ந்த 'கல்கந்தயா அல்லது அபித்தியா' என அழைக்கப்படும் நபரே தேடப்பட்டு வந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக, கொழும்பு குற்றப்பிரிவினர் தெரிவித்தனர்.

இச்சந்தேகநபர் இராணுவத்தின் 14ஆவது சிங்கப் படைப்பிரிவில் கடமையாற்றி, கடந்த 2010ஆம் ஆண்டு தப்பிச்சென்ற திறமையான துப்பாக்கிச் சூடு வீரரென, பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றப் பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஆர்.எம்.ஆர்.சதுரங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர், கொலன்னாவையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்த இச்சந்தேகநபரை மீதொட்டமுல்ல பிரதேசத்தில் சோதனையிட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும், பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச்சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையின் போது, டுபாயில் தலைமறைவாக இருந்து திட்டமிட்ட குற்றச்செயல்களு க்கு தலைமை தாங்கும் ஹினடியன மகேஷ் என்பவர், சந்தேகநபருக்கு பணம் செலவழித்து போலிக் கடவுச்சீட்டு தயாரித்ததாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவரது கடவுச்சீட்டு நீர்கொழும்பிலுள்ள வீடொன்றின் அறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

06

# அல் அஷ்ரப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டம்

அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தினுடைய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை AAMV பிரதான மண்டபத்திலேயே பழைய மாணவர் சங்கக் கூட்டம் நடைபெறவுள்ளதாக, அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தினுடைய பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

ஆகையால், இந்தக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் உட்பட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

# யாழில் Gas சிலிண்டர்களை நூதனமாக திருடிய இருவர்

## CID பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நகரிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளில் கடந்த சில நாட்களாக மிகவும் நூதனமான முறையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் திருடிய சந்தேகநபர்கள் இருவரை யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் (26) கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து 10க்கும் மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்களையும் கைப்பற்றியுள்ளனர்.



எரிவாயு சிலிண்டர்கள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்ததை தொடர்ந்து இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தன. இம்முறைப்பாட்டுக்கமைய விசாரணையை முன்னெடுத்து, குருநகர் பிரதேசத்தைச் சேர்ந்த இச்சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக, யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 12

### குறள் தரும் சிந்தனை



ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்

தனியாக நின்று பலரின் பகையைத் தேடிக் கொள்பவனை ஆணவம் பிடித்தவன் என்பதைவிட அறிவிலி என்பதே பொருத்தமாகும்.

## இலங்கை மீது மீண்டும் நாட்டம் கொள்ளும் சுற்றுலாப்பயணிகள்!

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை சமீப காலமாக அதிகரித்திருப்பதாக மகிழ்ச்சி தருகின்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து சமீப காலமாக படிப்படியாக மீண்டு வருகின்ற இலங்கையைப் பொறுத்தவரை இது நல்லதொரு செய்தியாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகை மென்மேலும் அதிகரிக்குமானால் இலங்கைக்கு அந்திய செலாவணி வருமானம் அதிகரிப்பதுடன், பொருளாதார நெருக்கடியும் விரைவில் தீர்ந்து விடுமென்று நாம் நம்பலாம்.

உலக சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை எமது நாடு மிகவும் பிரபல்யமான நாடு ஆகும். அழகிய கடற்கரைகள், மிகுந்த வனப்பு நிறைந்த மலையகப் பிரதேசம் மற்றும் தொல்லியல் அடையாளங்கள் உள்ள இடங்கள் என்றெல்லாம் இலங்கையில் மிகவும் அழகிய இடங்கள் ஏராளமாக உள்ளன. இலங்கையின் இயற்கை அழகை இரசிப்பதற்காகவும், இயற்கை வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்காகவும் இலங்கைக்கு வருகை தருவதற்கு உலக நாடுகளின் சுற்றுலாப்பயணிகள் விரும்புவதுண்டு.

யுத்தம் தீவிரமடைவதற்கு முன்னர் இலங்கைக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். மேற்கு நாடுகளைச் சேர்ந்த பெருமளவு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததால் எமது நாடு பெருந்தொகை வருமானத்தை அக்காலத்தில் ஈட்டி வந்தது. ஆனால் யுத்தம் உக்கிரமடைந்ததும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது படிப்படியாகக் குறைந்து போனது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. நாடெங்கும் அமைதியான சூழ்நிலை நிலவியதனால் இலங்கையின் எப்பாகத்துக்கும் சுற்றுலாப் பயணிகள் சென்று வரக்கூடியதாக இருந்ததால், உலகின் பல நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

ஆனால் அந்த சுமுகநிலைமை அதிக காலம் நீடிக்கவில்லை. ஈஸ்டர் பண்டிகையன்று பயங்கரவாதக் குழுவொன்று நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் அதலபாதாளத்துக்குச் சென்றது. பயங்கரவாதிகள் மேற்கொண்ட ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக இலங்கையின் பெருமளவு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதனால் உருவான அச்சம் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதற்கே அச்சம் கொண்டனர்.

அதன் காரணமாக எமது நாட்டுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு கொஞ்சநஞ்சமல்ல. ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் காரணமாக சுற்றுலாத்துறை பூச்சிய நிலைமைக்குச் சென்றிருந்ததென்றும் கூறலாம். குண்டுத்தாக்குதல் அச்சம் இலங்கையை விட்டு நீங்குவதற்கு சிறுது காலம் சென்றது. படிப்படியாக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரத் தொடங்கினர். நாட்டுக்கு வருமானமும் கிடைக்கத் தொடங்கியது.

ஆனால் அந்த நிம்மதியும் சிறிது காலத்துக்கே நீடித்தது. உலகப் பெருந்தொற்றான கொவிட் இலங்கையிலும் பரவியதன் காரணமாக உலக நாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தருவது மீண்டும் தடைப்பட்டது. சுமார் ஒன்றரை வருட காலத்துக்கு இவ்வாறான நிலைமை நீடித்தது எனலாம். இலங்கைக்கு மாத்திரமன்றி உலகநாடுகள் எதற்குமே சுற்றுலாப்பயணிகள் அக்காலத்தில் செல்லவில்லை. சுற்றுலாப் பிரதேசங்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

நாட்டுக்கு அந்நிய செலாவணி வருமானம் கிடைப்பது முற்றாகவே பாதிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, சுற்றுலாத்துறையை நம்பி மறைமுகமான வருமானம் ஈட்டி வந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அக்குடும்பங்கள் அடுத்தவேளை உணவுக்கே அல்லல்பட வேண்டியதொரு நிலைமை அக்காலத்தில் உருவானது. வருடக்கணக்காக நீடித்த இந்நிலைமையானது தற்போது படிப்படியாக சீரடைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அண்மைக் காலமாக அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியும் படிப்படியாக சீரடைந்து வருவதனால், சர்வதேச நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இலங்கை மீது மீண்டும் நாட்டம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். அவர்களது வருகை அதிகரிக்குமானால் எமது நாட்டின் பொருளாதார நெருக்கடி குறைவதற்கான வாய்ப்பு உள்ளதென்பதை மறுப்பதற்கில்லை.

சுற்றுலாத்துறையினால் வருமானம் ஈட்டுகின்ற நாடுகள் உலகில் அதிகம் உள்ளன. எமது அயல் நாடான மாலைதீவும் அவற்றில் ஒன்றாகும். முதலீடு இல்லாமல் வருமானம் தருகின்ற ஒரு துறையாக சுற்றுலாத்துறை உள்ளது. சுற்றுலாத்துறைக்கு மிகவும் வாய்ப்பான ஒருநாடாக இலங்கை உள்ளது. எனவே சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இஸ்ரேல்-காஸா யுத்தத்தினால் இடம்பெறுகின்ற உயிரிழப்புகளுக்கு எதிராக கண்டியில் ஊடக மாநாடு

காஸாவில் மனித உயிரிழப்புக்களை நிறுத்தக் கோரி கண்டியிலுள்ள சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்பினர் ஒன்றுசேர்ந்து ஊடக மாநாட்டினை கண்டி டெவோன் ஹோட்டலில் நடத்தினர். இதன் போது பலரும் பல்வேறு கருத்துக்களை முன் வைத்தனர்.

வேவெல ஸ்ரீசுர்தராம விஹாராதிபதி அதிவண. பஞ்யா கீர்த்தி தேரர் கருத்துத் தெரிவிக்கையில் "ஹமாஸ் இயக்கத்திற்கும் இஸ்ரேல் நாட்டுக்கும் இடையிலான போரினால் மனித உயிர்கள் பலி கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறிய பிள்ளைகள், பெண்கள், முதியவர்கள் உயிரிழந்து வருகின்றனர். இது தொடர்பில் நாங்கள் கவலையுற்றுள்ளோம். எங்களுடைய பௌத்த தர்மம் யுத்தத்தை அனுமதிப்பதில்லை. ஆதலால் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று எல்லோரும் ஒருங்கிணைந்து நீதிக்கான குரல் அமைப்பின் ஊடாக வேண்டி நிற்கின்றோம்" என்றார்.

கட்டுக்கலை அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் ராபி கருத்து தெரிவித்த போது, "கொடூரமான முறையில் காஸாவில் மனிதர்களை கொன்று குவித்து வருகிறார்கள். எந்த இனமாக இருந்தாலும் எந்த சமயத்தவராக இருந்தாலும் யாராக இருந்தாலும் மனிதர்களை கொன்றொழிப்பதை



அனுமதிக்க முடியாது. நாங்கள் ஒன்றிணைந்து இந்த மக்களின் பாதுகாப்புக்காக பிரார்த்தனைகளை மேற்கொள்வதோடு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து நீதிக்கான குரல் அமைப்பின் ஊடாக வேண்டுகோள் விடுப்போம். உடன் யுத்தம் நிறுத்தம் மேற்கொள்ளப்படுதுடன் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும்" என்றார்.

தொழிலதிபர் யூ. எம். பாசில் கருத்து முன் வைத்த போது, "இஸ்ரேல் பலஸ்தீன் யுத்தமானது மிகப் பெரிய அவலங்களைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் காணுகின்றோம். இது யுத்த தர்மத்தின் எல்லைகளைத் தாண்டிச் சென்று கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மனித நாகரீகம் அடைந்துள்ள இந்தக் காலத்தில் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. ஒன்றுமே அறியாத சிறுவர்கள் பெண்கள் உட்பட வைத்தியசாலையில் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டிருப்பவர்கள் கூட இதனால் கொல்லப்படுகின்றார்கள். ஆகவே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதை உலக நாடுகள் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்றார்.

அருட்திரு யூடான் யலோ பீரிஸ் கருத்து முன் வைத்த போது, "ஒருவரை பலி எடுப்பதால் நியாயத்தை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை நினைவூட்டிக் கொள்ள விரும்புகின்றேன். அது பற்றி எல்லா சமயங்களும் போதித்துள்ளன. கிறிஸ்த சமயமும் பைபிளும் இதைத்தான் கூறுகின்றன" என்றார்.

முன்னாள் யட்டி நுவர பிரதேச சபையின் உறுப்பினர் வசீர் முக்தார் கருத்தினை முன் வைக்கும் போது "காஸா பகுதியில் சிறு பிள்ளைகள கொன்றொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த கொடிய வன்முறை நிறுத்தப்பட வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் போன்றவர்களுடைய உயிர் காவு கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த அவல நிலை வெகுவிரைவில் நிறுத்தப்பட வேண்டும். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படுதல் வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

கணக்காளர் முபாரக், மாநகர சபை உறுப்பினர் அஸ்மி மரைக்கார், ரேனுகா உள்ளிட்ட பல்வேறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துகளை ஊடங்களுக்குப் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இக்பால் அலி...
(மாவத்தகம தினகரன் நிருபர்)

# தன்னார்வத் தொண்டு புரிவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர் இன்பரூபன்

தினமும் வடமராட்சியிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து, அரியாலைகண்டி வீதியில் அமைந்திருக்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பணிமனைக்குள் பிரவேசித்து, தனக்குரிய கடமைகளை படிப்படியாக நிறைவேற்றியவாறு, குறித்த பணிகள் தொடர்பாக வெளிக்கள வேலைத் திட்டங்களுக்கும் சென்று, பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து பயணக்களைப்பு முகத்தில் தோன்றாமலிருக்க அனைவருடனும் புன்சிரிப்போடு உரையாடுபவர் இன்பரூபன்.

மாலையானதும் காலையில் புறப்பட்டு வந்த திசைநோக்கி, மீண்டும் சென்று, இரவுப்பொழுதில் வீடடைந்து, குடும்பத்தினருடன் பொழுதை கழிக்கும் ஒருவருக்கு சேவை நலன் பாராட்டு விழா என அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக நாம் இயக்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் தொடர்பாளர் நிறுவனமாக செயற்பட்டுவரும் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் இம்மாவட்டங்களில் நடத்தப்பட்டுவரும் தகவல் அமர்வு – மாணவர் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளில் நான் சந்தித்த சுறுசுறுப்பான அன்பர்தான் இன்பரூபன்.

இன்முகத்துடன் அனைவருடனும் உறவாடும், இவர் இருக்குமிடம் கலகலப்பாகவும் இருக்கும். சுவாரஸ்யமாகப்பேசி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்துவார்.

இலங்கையில் பல வருடகாலமாக நீடித்த உள்நாட்டுப் போரினால் பெற்றவர்களை இழந்து நிர்க்கதியாகி, வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்ட தமிழ் மாணவர்களின் நலன் கருதி நாம் 1988 ஆம் ஆண்டளவில் அவுஸ்திரேலியாவில் 'இலங்கை மாணவர் கல்வி நிதியம்' என்ற பெயரில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை, இங்குள்ள மனிதநேயமும் கருணை உள்ளமும் கொண்ட அன்பர்களின் ஆதரவுடன் உருவாக்கினோம்.

இந்நிறுவனத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் தொடர்பாளர் அமைப்பாக இயங்கிவரும் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் அன்பர் இன்பரூபன் அவர்கள், 1997 ஆம் ஆண்டு தொடக்கம் இணைந்து இயங்கி வருகின்றார்.

இந்த நிறுவனத்தின் இயக்குநர் சபை உறுப்பினராகவும் திகழ்ந்திருக்கும் இன்பரூபன், இவரைப் போன்றே தன்னார்வப்பணிகளில் ஆர்வம் மிக்க அன்பர் சொக்கநாதன் யோகநாதன் அவர்களை குறித்த அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்க முன்னின்று பரிந்துரை செய்திருக்கிறார்.

அன்பர் சொக்கநாதன் யோகநாதன் கொவிட் பெருந்தொற்றினால் எம்மிடமிருந்து விடைபெற்றுவிட்டார் என்ற துயரமான செய்தியையும் நாம் கடந்து வந்திருக்கின்றோம்.



அமரர் சொக்கநாதன் யோகநாதனுக்காக மெய்நிகரில் (Zoom) ஒழுங்கு செய்யப்பட்ட இரங்கல் கூட்டங்களை ஒருங்கிணைப்பதிலும் இன்பரூபனின் பங்களிப்பு அதிகம்.

யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரம் உட்பட பல துறைகளில் சேவையாற்றி வருகிறது. இந்தப்பணிகளிலெல்லாம் அன்பர் இன்பரூபன் செயலூக்கமுள்ள தொண்டராக இயங்கி வருகிறார்.

எமது கல்வி நிதியம் வடக்கில் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாகவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதிக்கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. இது தொடர்பான அமர்வுகள் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் வருடாந்தம் நடக்கும் வேளைகளில் இன்பரூபனும் அவற்றில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.



இதற்கான பயணங்களில் நாம் ஈடுபடும்போது, எமது பயணக்களைப்பினை போக்குவதற்கு இன்பரூபன் இன்ப அதிர்ச்சியூட்டும் செய்திகளைச் சொல்லி எம்மை உற்சாகப்படுத்துவது வழக்கம்.

2016 ஆம் ஆண்டு முதல், யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் திட்ட முகாமையாளராக இயங்கிவரும் இன்பரூபன் அவர்கள், முன்மொழிந்திருக்கும் சில ஆக்கபூர்வமான திட்டங்கள் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஆளுமைப்பண்புகளுடன் அயர்ச்சியின்றி இயங்கிவரும் இன்பரூபன் அவர்களுக்கு அவரது ஊர் மக்கள் விழா எடுத்து பெருமைப்படுத்துவதையிட்டு, தொலைவிலிருந்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

சமூகத்திற்காக பேசுபவர்களும் சமூகத்தை பேசவைப்பவர்களும் தன்னார்வத்தொண்டர்களே. அந்த வகையில் தனது வாழ்நாளை அர்த்தமுடன் செலவிடும் அன்பர் இன்பரூபன் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

லெ.முருகபூபதி...

# காஸாவில் தொடரும் மனிதப் பேரவலம்!



இஸ்ரேலுக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருவதனால் சாதாரண பொதுமக்கள் தரப்பிலான உயிரிழப்புகள் அதிகரித்து வருவதையிட்டு உலகம் பெரிதும் கவலையடைந்துள்ளது.

இருதரப்பினரும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இஸ்ரேலில் ஏற்படுகின்ற உயிரிழப்புகளைப் பார்க்கிலும், காஸாவில் இடம்பெறுகின்ற உயிரிழப்புகளே மிகவும் அதிகமாக உள்ளன.

இஸ்ரேல் நடத்தி வருகின்ற ஆகாயமார்க்கமான தாக்குதல்களால் காஸாவில் இதுவரை ஏற்பட்டுள்ள மனிதப்பேரவலங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவையாக உள்ளன. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்கள் மடிந்துள்ளனர். உயிரிழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

காஸா நகரின் இரண்டாவது பெரிய மருத்துவமனையான அல் குத்ஸ் மருத்துவமனை பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பலியான மக்களின் பரிதாபங்கள் விபரிக்க முடியாதவையாகும். இந்நிலையில் வடக்கு காஸா பகுதியில் உள்ள பாடசாலைகள், மருத்துவமனைகள், பள்ளிவாசல்களும் தாக்குதலுக்கு தப்பவில்லை எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் காஸாவிற்குள் செல்லும் வீதிகள் சேதம் அடைந்துள்ளதால், நிவாரணப் பொருட்கள் தாமதமாகவே காஸாவிற்குள் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் காஸாவில் இடம்பெறுகின்ற சாதாரண பொதுமக்கள் உயிரிழப்புகள் தொடர்பாக இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பினரும் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். காஸா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் தவறுதலாக ஏவுகணைகளை வீசி பாலஸ்தீன மக்களை கொன்று வருவதாக இஸ்ரேல் குற்றம் சாட்டுகிறது. ஆனால் இஸ்ரேல் படையினரே பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக பாலஸ்தீன தரப்பு குற்றம் சாட்டுகின்றது.



அதுமாத்திரமன்றி இஸ்ரேல் மீதே உலக நாடுகள் பலவும் குற்றம் சுமத்துகின்றன.

காஸா சுகாதாரத்துறை தகவலின் படி, அங்கு சுமார் ஐயாயிரம் பேர் உயிரிழந்துள்ளதாகவும் 14 ஆயிரம் பேர் காயமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகமென்றே தெரிவிக்கப்படுகின்றது.

**ஒருபுறம் வான்வழித் தாக்குதல்கள்; மறுபுறம் உணவு, உயிர் உத்தவாதம், மருத்துவ வசதிகள் இன்றி குழந்தைகள் உட்பட சாதாரண மக்கள் பரிதாப நிலையில்!**

இஸ்ரேல் இராணுவம் நடத்திய விமானப்படைத் தாக்குதலில் இதுவரை காஸா நகரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் மொத்தமாக சிதைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதுவரை 1,688 பாலஸ்தீன குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாக பலஸ்தீன தரப்பில் அரசின் சமூகவலைதள பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஐந்து நிமிடத்திற்கு ஒரு பலஸ்தீன குழந்தை மரணிப்பதாக மத்திய கிழக்கு ஆசியாவை கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எல்லை வழியே 20 லொறிகள் காஸா நகரத்திற்குள் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் வெறும் 22,000 தண்ணீர் போத்தல்கள் மட்டுமே இருந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மொத்தம் 23 இலட்சம் பேர் வசிக்கும் நகரில், இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு என ஐ.நா வேதனை தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் இந்தியா உட்பட உலக நாடுகள் பல எகிப்து வழியாக காஸாவிற்கு நிவாரணப் பொருட்களை கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பி வருகின்றன. இருப்பினும் அவற்றை காஸா நகருக்குள் கொண்டு சேர்ப்பது மிகவும் சவால் மிகுந்த பணியாக இருப்பதாக ஐ.நா ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் காஸா நகரின் இரண்டாவது பெரிய மருத்துவமனையான அல் குத்ஸ் மருத்துவமனை தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உள்ளாகும் சூழல் உள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. வடக்கு காஸாவில் உள்ள அல் குச் மருத்துவமனையில் இருந்து இதுவரை 400 அவசர சிகிச்சை நோயாளிகளும், 1200 புற நோயாளிகளும், மருத்துவமனையை சுற்றி தங்கி இருந்த 12,000 மக்களும் அந்த பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

மருத்துவமனை மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச போர்க் குற்றம் என்பதை இஸ்ரேல் மறந்துள்ளதாக பலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கம் பதிவிட்டுள்ளது. காஸாவில் 10 இலட்சம் குழந்தைகளின் உயிர்கள் உத்தரவாதமின்றி இருப்பதாக Save the Children தன்னார்வ அமைப்பு கூறியுள்ளது.

மருத்துவமனைகளில் மருந்துப் பொருட்கள் பற்றக்குறையால் பலருக்கு சிகிச்சை அளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை இன்னும் சில நாட்கள் நீடிக்கும் பட்சத்தில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. 50,000 கர்ப்பிணிகள் போதிய மருத்துவ உதவிகள் இல்லாமல் தவிக்கிறார்கள் என Save the children அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருபுறம் மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காஸா மக்களும் குழந்தைகளும் இருபெரும் சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காஸாவில் இருக்கின்றனர்.

காசாவில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள பலஸ்தீனிய அதிகாரிகள், இந்த வான்வழித் தாக்குதல் வேண்டுமென்றே நடத்தப்பட்டதாகக் கூறி இஸ்ரேலைக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இஸ்ரேல் தாம் அதில் ஈடுபடவில்லை என மறுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கும் மறுப்புக்கும் இடையில், உண்மையைக் கண்டறிதல் மென்மேலும் கடினமாகியுள்ளது. காஸாவில் கடந்த ஏழாம் திகதி இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியதில் இருந்து இதுவரை 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஒரே நாளில் இஸ்ரேல் தாக்குதலில் 436 பேர் பலியான சம்பவமொன்று நடந்ததாகவும் பலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

காஸாவில் மற்ற அரசு அமைப்புகளைப் போல சுகாதாரத்துறையும் ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு கொல்லப்பட்டவர்களில் 40 சதவீதமானோர் குழந்தைகள் என காஸாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காஸாவில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

# அனைவரும் ஒத்துழைத்தால் அடுத்தவருடம் போக்குவரத்துத் துறையில் திருப்புமுனை!

## அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுடன் சந்திப்பு



**அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கினால் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறையில் திருப்புமுனையை அடைய முடியும் என்று போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சுற்றாடலுக்கு நட்பான நடைமுறைகளின் ஊடாக போக்குவரத்துத் துறையை மேம்படுத்த 2024 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். எமது நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**கே: தேசிய போக்குவரத்து அமைப்பை மின்மயமாக்குவது நிலையான வளர்ச்சிக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கும்?**

பதில்: தேசிய போக்குவரத்து அமைப்பின் மின்மயமாக்கல் இலங்கையின் நிலையான அபிவிருத்தியை நோக்கிய ஒரு முக்கிய பயணத்தைக் குறிக்கும். 2024 ஆம் ஆண்டுக்குள் முழு போக்குவரத்து அமைப்பையும் டிஜிட்டல், மின்னியல் கட்டமைப்புக்கு மாற்றுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை மேற்கொள்வதே எங்களின் நோக்கமாகும்.

இந்த ஒருங்கிணைப்பானது போக்குவரத்து, தொழில், சுற்றுச்சூழல் மற்றும் மின்சாரம், எரிசக்தி உட்பட பல அமைச்சுக்களை உள்ளடக்கியதாகும். செலவு குறைந்த, நம்பகமான, உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலுக்கு நட்பான போக்குவரத்துத் துறையை உருவாக்க இந்த ஒருங்கிணைப்பானது ஒற்றுமையுடன் செயல்படுகிறது.

**கே: இது அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டமா?**

பதில்: இல்லை, இது அரசாங்கத்தினால் தனியாக முன்னெடுக்கப்படும் திட்டமல்ல. இது மேற்கூறிய இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட அரச_ தனியார் கூட்டாண்மையுடனான திட்டமாகும். எனது தலைமையின் கீழ் அரசாங்கத்தின் வழிகாட்டுதல் மற்றும் தொலைநோக்கு குறித்த கண்ணோட்டங்கள் வழங்கப்படுகின்றன. உண்மையில் இது அரச மற்றும் தனியார் கூட்டாண்மையுடன் மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சியாகும்.

**கே: பேருந்துகள், ரயில்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் உட்பட பல்வேறு வாகனங்களின் போக்குவரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கும் முக்கிய மாற்றங்கள் யாவை?**

பதில்: மின்மயமாக்கல் தொடர்பான முக்கிய மாற்றங்களை நான் முன்னிலைப்படுத்த விரும்புகிறேன். முதலாவதாக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்குவதற்காக 'இமோட்டரிங்' திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம்.

காலதாமதங்கள், முறைகேடுகள், மோசடிகள் மற்றும் ஊழல்கள் எனப் பல ஆண்டுகளாக இந்தத் துறை பல குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளது. இந்தச் சிக்கல்களைச் சரிசெய்வதற்கு டிஜிட்டல் மயமாக்கல் ஒரு முக்கியமான தீர்வாகும். முன்னதாக, 'இமோட்டரிங்' திட்டத்திற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு, நிலையான நெறிமுறைகளைப் பின்பற்றி அவற்றின் செயற்பாடுகள் முன்னாள் அமைச்சர்களால் தொடங்கி வைக்கப்பட்டிருந்தன.

இருப்பினும், பல்வேறு காரணிகள் இதற்குத் தடையாக அமைந்துள்ளன. நாரஹேன்பிட்டியிலிருந்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தை வெரஹெரவிற்கு இடமாற்றம் செய்து புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான தேவை முதன்மையான சவாலாக இருந்தது. தற்போது கட்டுமானப் பணிகளுக்கு அரசு நிதி ஒதுக்காததால், இத்திட்டம் மூன்று முதல் நான்கு ஆண்டுகள் தாமதமாகிறது.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஹுனுப்பிட்டிய கங்காராமயவிற்கு அருகில் உள்ள கட்டடத் தொகுதியொன்றை 'இமோட்டார்' திட்டத்திற்காகப் பெறும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம். போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இந்த முயற்சியை மேற்பார்வை செய்கிறார்.

வரவிருக்கும் ஆண்டில், மேம்பட்ட தொழில்நுட்பத்தின் மூலம் வாகனப் பதிவில் புரட்சிகரமான மாற்றத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இரண்டாவதாக மின்சார வாகனங்களை இணைத்தல், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு தனியார் துறையை நாங்கள் முழுமனதுடன் ஆதரிக்கிறோம், இதன் மூலம் புதைபடிவ எரிபொருட்கள் மீதான நமது மற்றும் உலகத்தின் நம்பகத்தன்மை குறைந்து செல்லும்.

மின்னியல் முச்சக்கர வண்டிகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கான இலக்கத்தகடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ரயில்கள் மற்றும் பேருந்துகளுக்கான எங்கள் இடிக்கெட் கட்டமைப்பு, அவற்றின் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறன் அதிகரிக்கும்.

மேல்மாகாணத்தில் 200 மின்சார பஸ்களை இயக்குவதற்கு சர்வதேச கேள்விப்பத்திரங்களை நாங்கள் கோரியுள்ளோம். மேலும் களனி பள்ளத்தாக்கு ரயில் பாதையை மின்மயமாக்குவதற்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதை மின்சார ரயில் வலையமைப்பாக மாற்றும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

**கே: இதன்படி அடுத்த ஆண்டு மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் கார்கள், பேருந்துகள், ரயில்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவது நமக்கு நடைமுறைச் சாத்தியமாகுமா?**

பதில்: மின்சார மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் கார்கள், பேருந்துகள் மற்றும் ரயில்கள் இலங்கையில் நடைமுறை யதார்த்தமாக மாறுவதற்கான வாய்ப்பு உண்மையில் காணப்படுகிறது. ஆரம்பத்தில் சாத்தியமற்றதாகக் கருதப்பட்ட தேசியத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதற்கான சாதனைப் பதிவு எங்களிடம் உள்ளது. எனவே, அனைத்துத் தரப்பினரும் உடன்பட்டால், போக்குவரத்துத் துறையில் இந்த திருப்புமுனையை 2024ஆம் ஆண்டு அடைய முடியும்.

குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், இலங்கையில் பல திறமையான தனிநபர்கள் மற்றும் நிறுவனத்தினர் எமது தேசத்தை பெருமையுடன் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய மின்சார வாகனங்களை உற்பத்தி செய்கின்றனர். இதுபோன்ற சுமார் 1520 நிறுவனங்கள் மின்சார சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் கார்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பலவற்றை உருவாக்குகின்றன. இந்த தயாரிப்புகள் சர்வதேச அரங்கில் போட்டியிடுவது மட்டுமல்லாமல், ஏற்கனவே வெளிநாட்டு சந்தைகளிலும் தங்கள் அடையாளத்தை உருவாக்குகின்றன. மேலும், மின்சார வாகன பற்றரிகளில் முன்னேற்றங்கள் மற்றும் மாற்றத்தை எளிதாக்குவதற்கு இசார்ஜிங் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**மேல்மாகாணத்தில் 200 மின்சார பஸ்களை இயக்குவதற்கு சர்வதேச கேள்விப்பத்திரங்களை நாங்கள் கோரியுள்ளோம். களனி பள்ளத்தாக்கு ரயில் பாதையை மின்மயமாக்குவதற்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதை மின்சார ரயில் வலையமைப்பாக மாற்றும் முயற்சிகள் இடம்பெறுகின்றன**

**கே: எனினும், எமது நாட்டில் சைக்கிளைக் கூடத் தயாரிக்க முடியாது என சில அரசியல் கட்சிகள் விமர்சிக்கின்றனவே... அது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: நமது திறன்களைப் பற்றி சந்தேகம் கொண்டவர்கள் அல்லது அவநம்பிக்கையான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களுக்கு, எங்களிடம் பதில் உள்ளது. இலங்கையின் தனியார் துறையின் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் சர்வதேச கண்காட்சி உலக போக்குவரத்து தினத்துடன் இணைந்து நவம்பர் 10 முதல் 12 வரை ஹோமாகம பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியானது மின்சார மோட்டார் வாகனங்கள் மட்டுமின்றி, பற்றரிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் பயன்பாட்டுக் கருவிகள் உள்ளிட்ட உலகளாவிய மின்சார வாகனத் தொழில் தொடர்பான பல்வேறு உபதயாரிப்புகளையும் காட்சிப்படுத்துகிறது. இந்தக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் முயற்சியில், சர்வதேச உற்பத்தியாளர்களுக்கு பங்கேற்க அழைப்பு விடுக்கிறோம்.

இக்கண்காட்சியின் மூலம், இலங்கையில் உள்ள பல மின் உற்பத்தியாளர்களின் பின்னடைவு மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் திறன்களை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த அறிவு, இப்போது வரை, ஒப்பீட்டளவில் அறியப்படாத தேசிய பெருமையின் ஆதாரமாக இருந்து வருகிறது.

**கே: கார் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக நீங்கள் திருப்தி அடைகிறீர்களா?**

பதில்: குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இறக்குமதி தொடர்பாக இன்னும் கேள்விகள் காணப்படுவதுடன், அதற்கான சவால்களும் உள்ளன. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புகளுடன் இணைந்து இது தொடர்பான தீர்வுகளை எளிதாக்கும் சிறப்பு கடன் திட்டங்களை ஏற்பாடு செய்ய நாங்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகிறோம். உள்நாட்டில் இணைக்கப்பட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மின்சார வாகனங்களின் பதிவுக்கான தரங்களை நாங்கள் தயாரித்து வருகிறோம். இது எங்கள் அணுகுமுறையில் ஒரு வரலாற்று மாற்றத்தைக் குறிக்கிறது.

**கே: மின்நெருக்கடி ஏற்படுகின்ற போது, வாகனங்களை மின்சாரத்தில் மாற்றுவது சவாலாக இல்லையா?**

பதில்: வாகனங்களின் மின்மயமாக்கலுக்கு மின்சார நெருக்கடி ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது என்ற கருத்து புரிதலின்மையால் வேரூன்றியுள்ளது. இந்தக் கவலையைத் தீர்க்க, ஒருவர் ட்ரேஸ் இன்ஸ்டிடியூட்டுக்குச் செல்ல வேண்டும், அங்கு சூரிய சக்தியால் பற்றரி சார்ஜிங் நிலையங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை நீங்கள் பார்க்கலாம்.

மேலும், சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் வாகனங்களை உருவாக்குவதில் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளனர். இந்த முயற்சிகள் மின்சார வாகனங்களுக்கு மாறுவது தேசிய மின்சார விநியோகத்தை கஷ்டப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

எவ்வாறாயினும், எங்களிடம் அறிவு மற்றும் திறன்கள் இருக்கும்போது, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் வலுவான ஆதரவு தேவைப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்வது முக்கியம்.

மற்ற நாடுகளில் நிதியுதவி கணிசமானதாக உள்ளது, மேலும் இந்த முயற்சிகளுக்கு பல்கலைக்கழக அமைப்பு இன்னும் கூடுதலான பங்களிப்பை வழங்குவதற்கான திறனை நாம் அங்கீகரிக்க வேண்டும். நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில், பாடசாலைகளில் தொழில்நுட்பத்தை புகுத்தும் பணியை தொடக்கினேன்.

இந்த முயற்சியின் ஒரு முக்கிய அங்கம் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பொறியியல் தொழில்நுட்பமாகும். இதன் விளைவாக, இப்போது கணிசமான எண்ணிக்கையிலான தனிநபர்கள் மேம்பட்ட நிலையில் மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தைப் படிக்கின்றனர்.

# ஆறு குழந்தைகளைப் பிரசவித்துள்ள பெண்ணின் குடும்பத்துக்கு ரூபா ஒரு இலட்சம் உதவித்தொகை



## தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் மனிதாபிமானம்!

ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் பிள்ளைகளை பெற்றெடுத்துள்ள கம்பஹா, வியாங்கொடை பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதான மதுகீ லக்சிகா இசுறூ பெரோரா தம்பதியினருக்கு அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கான பராமரிப்பு நிதியுதவிகள் தியாகி அறக்கொடை நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆறு குழந்தைகளை அண்மையில் கொழும்பு காசல் மகளிர் மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் திருமதி மதுகீ லக்சிகா இசுறூ பெரோரா பெற்றெடுத்துள்ளார்.

துரதிருஷ்டவசமாக ஒரு குழந்தை தனது நுரையீரலில் ஏற்பட்ட இரத்தக்கசிவு காரணமாக இறந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

இக்குடும்பத்தின் நிலைமை குறித்து ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான வாமதேவன் தியாகேந்திரன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு இணங்க முதல் கட்டமாக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி இக்குழந்தைகளின் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது.

எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் குறித்த தம்பதியினரிடம் கொழும்பு காசல் மகளிர் மருத்துவமனையில் வைத்து அதன் பணிப்பாளர் வைத்தியர் ஏ.தந்த நாராயன முன்னிலையில் இத்தொகை ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இக்குழந்தைகளின் பராமரிப்புக்காக மாதாந்த 25 ஆயிரம் ரூபா நிதியுதவியினை தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்குவதற்கு நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'இன,மத வேறுபாடுகளைக் கடந்து நாம் அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையிலேயே பாதிக்கப்பட்ட தேவையுடைய மக்கள் தன்னிடம் கேட்காமலே அவர்களின் இல்லம் தேடிச் சென்று உதவும் தன்மையை கொண்ட ஒரு கொடை வள்ளல் தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன்' என்று அங்கு கருத்துத் தெரிவித்த பாரிஸ் குறிப்பிட்டார்.



இதேவேளை ஆறு பிள்ளைகளை பிரசவித்துள்ளதுள்ள குறித்த பெண்ணின் கணவர் கருத்து தெரிவிக்கும் போது 'இன,மத மொழி வேறுபாடுகளைக் கடந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் எனது குழந்தைகளின் பராமரிப்புக்காக உதவ முன்வந்தமை எனக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நாட்டில் மனிதாபிமானமிக்க இலங்கையர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது நல்லதொரு முன்னுதாரணமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு உதவிய அந்த நல்லுள்ளத்திற்கும் இந்த உதவியை எனது காலடிக்கு கொண்டு சேர்த்த ஊடகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார். மேலும் இவ் வருடத்திற்குள் இவ்வாறான நான்கு குழந்தைகளை பிரவேசித்துள்ள புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் தாய்க்கும், மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ள ஹட்டன் மஸ்கெலியா புரன்வீன் ராணிதோட்டதைச் சேர்ந்த தமிழ்த் தாய்க்கும் , நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ள குருநாகல் பிரதேசத்தை சேர்ந்த சிங்கள தாய்க்கும் குழந்தை பராமரிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மனிதாபிமான வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் தியாகி அறக்கொடை நிதியம் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அதன் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒந்தாச்சிமடம் பாரதி பாலர் பாடசாலையை புனரமைத்த இணைந்த கரங்கள் அமைப்பு

மட்டக்களப்பு மாவட்டம், ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் நீண்ட காலமாக இயங்கி வருகின்ற பாரதி பாலர் பாடசாலையை புனரமைப்பு செய்யும் தேவை உள்ளதாக ஒந்தாச்சிமடம் விளையாட்டுக் கழகம் மற்றும் சமூக நலன்விரும்பிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இணைந்த கரங்கள் அமைப்பினால் அப்பாடசாலை புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு பாரதி பாலர் பாடசாலை அதிபர் திருமதி. வி. அமிர்தகலா தலைமையில் கையளிக்கப்பட்டது.




'இணைந்த கரங்கள்' அமைப்பின் நிதி உதவியுடனும், இணைந்த கரங்கள் அமைப்பின் உறவுகளின் நிதி உதவியுடனும் புனரமைக்கப்பட்டு, இப்பாலர் பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக செயட்பாட்டாளர் ந. கனகராஜ் கலந்து கொண்டார்.



மேலும் இந்நிகழ்வில் அப்பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர் க. சுரேஸ், ஒந்தாச்சிமடம் விளையாட்டுக்கழக தலைவர் ச.சிரஞ்ஜீவி, கழக உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலையின் அதிபர், ஆலயபரிபாலன சபை பிரதிநிதிகள், கிராம சமூக சேவையாளர்கள், மாணவர்கள், பெற்றோர், இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான ந.கனராஜ், லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

வாஹிட் முகம்மது ஜெஸீல்...

# காத்தான்குடி மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தில் நூலக திறப்புவிழா

காத்தான்குடி மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நூலகத்தை இந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளருமான அமீர் அஜ்வத் நழீமி அண்மையில் திறந்து வைத்தார்.

இப்பாடசாலையின் பழைய மாணவரான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அமீர் அஜ்வத் நழீமி வழங்கிய உதவியினால் இந்தப் பாடசாலையின் நூலகம் புனரமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அமீர் அஜ்வத் நழீமி, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் பஸால் ஜிப்ரி, பழைய மாணவர் சங்கப் பொருளாளர் எம்.ஏ.சி. எம்.ஜெலீஸ் மற்றும் அமீர் அஜ்வத் நழீமி அவர்களின் குடும்ப உறவினர்கள், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்





இதன் போது அமீர் அஜ்வத் நழீமி அவர்களினால் பாடசாலைக்கான கணினி ஒன்றும் நூலகத்துக்கான நூல்களும் அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)


## இன்றைய பலன்கள்




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**

கவலை தீரும். தொழில் மேன்மையாக இலாபகரமாக நடைபெறும்.எந்த வேலையும் கடின உழைப்புக்குப் பின்தான் பலம் தரும்.

**ரிஷபம்:**

அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**மிதுனம்:**

வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். புதிய மனை வீடு வாங்கும் யோகம் ஏற்படும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள்.

**கடகம்:**


அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். பேச்சில் துணிச்சல் இருக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல் வாய்ப்புக்கள் கிடைக்கும்.


**சிம்மம்:**

உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகள் உதவுவார்கள்.

**கன்னி:**


உங்கள் சந்தோசம் அதிகரிக்க செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும்.

**துலாம்:**

பண வரவு தாராளமாக இருக்கும். தொழில்கள் நன்றாக நடக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. தெய்வ தரிசனம் உண்டு.

**விருச்சிகம்:**

அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு வேலை திருப்தியாக இருக்கும்.

**தனுசு:**

பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் நல்லவிதமாக இருக்கும்.

**மகரம்:**

உத்தியோகத்தில் புதிய திருப்பம் காண்பர். சிலருக்கு பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக் கூடும் .

**கும்பம்:**

நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்:**

ஆழ்ந்து உங்கள் மனது சொல்வதைக் கேளுங்கள் அவசரமோ படபடப்போ வேண்டாம். பணப் பற்றாக்குறை இருக்காது.

### 2022 இல் ஏற்றுமதி... (03ஆம் பக்கத் தொடர்)

கைத்தொழில் கொள்கை தொடர்பான ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சு அதனைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

### ஜனாதிபதி மாளிகையை... (03ஆம் பக்கத் தொடர்)

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, இந்த விடயம் அரசல் புரசலாக இடம்பெற்றமை போலவுள்ளதால், இதனை பார்வையிட்டு ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முடிவுகளை அறிவிப்பதாகவும் இது தொடர்பாக ஆராய விசேட கூட்டமொன்றை கூட்டவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### பலஸ்தீனத்தில் விரைவில்... (03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சருடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதித் தவிசாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராஜதுரை ஆகியோரும் பங்கேற்றனர்.

### விமான நிலையத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

இதன் பின்னர், மேலதிக விசாரணைக்காக இச்சீனப் பெண்ணை கட்டுநாயக்க விமான நிலையத்தின் எல்லை கண்காணிப்புப் பிரிவினரிடம் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

### யாழில் Gas சிலிண்டர்களை... (03ஆம் பக்கத் தொடர்)

இச்சந்தேகநபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களென்பதுடன், போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காகவே எரிவாயு சிலிண்டர்களை இவர்கள் திருடியமை ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

### டுபாயிலுள்ள ஹீனடியேன... (03ஆம் பக்கத் தொடர்)

அத்துடன், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டு, வீட்டின் பின்புறத்தில் போத்தலில் வைத்து குழியில் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் போது, ஹீனடியேன மகேஷின் ஆலோசனைக்கமைய, சந்தேகநபரின் ஹொரன்பல்ல வேரகொடமுல்ல வீட்டுக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோத துப்பாக்கியொன்றையும் கண்டுபிடித்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

### கொழும்பில் பாரிய தீ விபத்து...

ஈடுபட்டதுடன், தீப்பரவலால் கடுமையாக புகை சூழ்ந்ததாலும் தீப்பிடித்த கட்டடத்தை அண்மிக்கும் பாதையில் இடையூறுகள் காரணமாகவும் கொழும்பு தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைப்பதில் பாரிய சிரமத்தை எதிர்நோக்கினர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 23ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுள் 6 பேர் பலத்த தீக்காயத்துக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### ரயில் மோதி இரு யானைகள்...

தெரிவித்தனர். இதேவேளை, செட்டிகுளத்தில் சமீப காலமாக பெரும்பாலான காட்டு யானைகள் ரயில் மோதி உயிரிழந்துள்ளதாக, செட்டிகுளம் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த வருடத்தின் இதுவரையில் மாத்திரம் சுமார் 191 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக, வனஜீவராசிகள் திணைக்களத்தின் யானைகள் பாதுகாப்புப்பிரிவினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

### 18 ATM களிலிருந்து...

ATM களில் இந்த பண மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், ATM இல் பணம் எடுக்க வரும் நபர்களை ஏமாற்றி, அவர்களின் ATM அட்டைகளை பயன்படுத்தி இந்த மோசடியை சந்தேகநபர்கள் புரிந்துள்ளதாகவும் தெரிவித்தனர். இந்நிலையில், சந்தேகநபர்களிடமிருந்து மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட 13 அட்டைகள், ஐஸ் போதைப் பொருள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

### இலங்கை பெண்ணின்...

இன்று காலை இந்தப் பெண்ணின் சடலம் இலங்கையை வந்தடையுமெனவும், இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இந்த யுத்தத்தின் போது, காணாமல் போன மற்றைய இலங்கையர் இறந்துவிட்டாரா? என்னவென்பது தொடர்பாக கண்டறியும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இந்நிலையில், அவரது குழந்தைகளின் டி.என்.ஏ. மாதிரியை பயன்படுத்தி உறுதிப்படுத்தப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# முத்தமிழ் மாநாடும் கலாச்சார விழாவும் இன்று ரம்பொடையில் கோலாகலமாக ஆரம்பமாகிறது

## இதொகா தலைவர் செந்தில் தொண்டமான், ம.ம.மு உப தலைவர் சதீஷ்குமார், ஐடிஎம் நேஷன் கெம்பஸ் நிறுவன தலைவர் ஜனகன் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்



அமெரிக்க முத்தமிழ்ப் பேரவையும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து நடத்தும் உலக முத்தமிழ் மாநாடு இன்றும் நாளையும் (சனி /ஞாயிறு) நுவரெலியா இறம்பொடை தொண்டமான் கலாச்சார மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இம்மாநாட்டில் இலங்கை, இந்திய பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், இலக்கிய ஆளுமைகள், தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இலங்கையில் கலை இலக்கியத் துறையில் பங்களிப்பு செய்து வரும் படைப்பாளிகளுக்கு பாராட்டு கௌரவமளிக்கப்பட உள்ளதோடு கலை, கலாச்சார நிகழ்ச்களும் இடம்பெற உள்ளன.

உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன், உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இதொகாவின் தலைவரும் ஆளுநருமான செந்தில் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலரும் சிறப்பு விருந்தினர்களாக இதில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வாறான ஒரு மாநாட்டை கடந்த வாரம் தமிழகத்தில் கோலாகலமாக நடத்திவிட்டு இவ்வாரம் இலங்கை மண்ணில் நடத்த முன் வந்துள்ள உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன், உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

முதல் நாள் நிகழ்ச்சி 29ஆம் திகதியாகிய இன்று காலை 9.30 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், மங்கள விளக்கேற்றல் நடைபெறவுள்ளது. காலை 10 மணிக்கு மாநாடு தொடக்கவிழா நடைபெறவுள்ளது. உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் வரவேற்புரை ஆற்ற, இங்கிலாந்து குளோபல் ஆர்ட்ஸ் அகடமியின் நிறுவனர் பிரதீஷ் குமார் முன்னிலை உரையாற்றுவார். உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன் தலைமை உரையாற்றுவார். அதன்பின் ஆய்வுக்கோவை மாநாட்டுச் சிறப்புமலர் வெளியீடு இடம்பெறும். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் சிறப்புரை இடம்பெறும். மலரின் முதல்படியை அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி உ. கலையரசி பெற்றுக் கொள்வார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் சி. தியாகராஜனும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை இணைப்பேரசிரியர் முனைவர் சி. அமுதாவும் வாழ்த்துரை வழங்குவார்கள். தொடர்ந்து கருத்தரங்கு அமர்வுகள் இடம்பெறும். உணவு இடைவேளைக்குப்பின் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இடம்பெறும். அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவையின் கல்விக் குழுத் தலைவர் முனைவர் ஜோ. சம்பத் குமார் பட்டமளிப்பு விழாவின் வரவேற்புரையை நிகழ்த்துவார். அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவையின் பதிவாளர் முனைவர் மோ. பாட்டழகன் பட்டமளிப்பு விழாவின் அறிவிப்பை செய்வார்.

இங்கு சோ. பத்மநாதன், மேழிக்குமரன் கதிரிப்பிள்ளை அருந்தவராஜா, முகமது முகைதீன் அப்துல் அனஸ், கந்தையா ஈஸ்வரலிங்கம், ப. மதனவாசன், சாந்தி ராஜேந்திரன், ஷாமினி இராமநாதன், சித்ரா வெங்கட் நாராயணன், பெருமாள் வடிவேலன், எம். ஏ. எல். அஸ்மத், கோபாலசிங்கம், அமுதா தண்டபாணி, கமலாதேவி ஞானதாஸ் ஆகியோர் மதிப்புறு முனைவர் பட்டம் பெற தெரிவு செய்யப்பட்ட ஆளுமைகளாவார்கள். ஐடிஎம் நேஷன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் விநாயகமூர்த்தி ஜனகன் பட்டமளிப்பு விழா சிறப்புரை ஆற்றுவார். மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் வாழ்த்துரை வழங்குவார்.

மாலையில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். அமெரிக்கா முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நடனத்துறையும் குளோபல் ஆர்ட்ஸ் அகடமியும் இணைந்து வழங்கும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இங்கிலாந்து குளோபல் ஆர்ட்ஸ் அகடமியின் நிறுவனர் பிரதீஷ்குமார் வரவேற்புரை நிகழ்த்த, உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன் சிறப்புரையாற்ற, முத்தமிழ் இலக்கியப் பேரவையின் நிர்வாகி முனைவர் ஜான் இளவரசு நன்றிய உரையாற்றுவார். அத்துடன் முதலாம் நாள் நிகழ்வுகள் நிறைவு பெறும்.

### கிழக்கில் சகல காணிகளும்...

அவர்களின் விவசாய செயற்பாடுகளை பாதுகாக்கும் வகையில் வெளிமாவட்டங்களிலிருந்து வந்திருப்போருக்கு தற்காலிக ஊக்குவிப்பு தொகையை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். எவ்வாறாயினும், அம்பாறை மற்றும் பொலன்னறுவையிலிருந்து வந்தவர்களை அம்மாவட்டங்களிலேயே விரைவில் குடியமர்த்துவது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது. அதேபோல் மயிலத்தமடு, திவுலபத்தன பகுதியில் யுத்தத்துக்கு முன்னர் வசித்த மக்கள் அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் மீள்குடியமர்த்தப்பட வேண்டியது கட்டாயமாதென ஜனாதிபதி வலியுறுத்தியிருக்கும் நிலையில், அப்பணியை மகாவலி அமைச்சு சட்ட ரீதியாக முன்னெடுத்து வருகின்றது. இதேவேளை, அனுமதியின்றி அரச காணிகளில் வசிப்பவர்களின் காணிகளைக் கையகப்படுத்தி, அவர்களை அக்காணிகளில் சட்ட ரீதியாக குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் அரச காணிகளில் அனுமதியின்றி வசிப்பவர்கள் விண்ணப்பங்களைச் சமர்பித்து, தமது இருப்பை சட்ட ரீதியாக்கி கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார்.

### LIOC நிறுவன உரிமம்...

பணிப்பாளரான தீபக் தாஸ், கொழும்பிலுள்ள பங்குச்சந்தையின் தலைமை ஒழுங்குமுறை அதிகாரிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார். இதற்கமைய லங்கா ஐ.ஓ.சி.யின் இலங்கையிலுள்ள உள்ளூர் விநியோக நிறுவனங்கள், இலங்கையில் சில்லறை வர்த்தக நடவடிக்கையை மேலும் 20 ஆண்டுகளுக்கு தொடர அனுமதித்துள்ளது. இந்த புதுப்பிக்கப்பட்ட உரிமம், அடுத்த ஆண்டு (2024) ஜனவரி மாதம் 22ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய நாடு, புதிய பொருளாதாரம்...

கொழும்பு றோயல் கல்லூரியினுடைய பிரதான மண்டபத்தின் நூற்றாண்டு விழாவையிட்டு நேற்று (27) நடைபெற்ற 'ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். பாடசாலை கட்டமைப்புக்குள் முன்னெடுத்துச் செல்லப்படும் தரமான கல்வி முறைமையை பாராட்டிய ஜனாதிபதி, இதில் றோயல் கல்லூரிக்கு முக்கிய பங்கு உண்டென்பதுடன், நாட்டுக்காக கடமையாற்ற றோயல் கல்லூரியினர் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்வின் அடையாளமாக வெளியிடப்பட்ட நூலின் முதல் பிரதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், நினைவுச்சின்னமொன்றையும் அப்பாடசாலையின் அதிபர் திலக் வத்துஹேவா வழங்கி வைத்தார். இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''வெறுமனே செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடமாக மாத்திரமின்றி, நாட்டுச் சம்பிரதாயங்களின் அடையாளமாகவும் விளங்கும் இந்த மண்டபத்தின் வரலாறு நீண்டு செல்கிறது. எமது நாட்டின் அரசியல் முன்னோடிகளான சீ.ஏ.லோரன்ஸ், ரிசட் மோகன், முத்துக்குமாரசாமி மற்றும் ஜேம்ஸ் டி அல்விஸ் உள்ளிட்ட அனைவரும் றோயல் கல்லூரியில் உருவானவர்கள். அதேபோல் ஆனந்த குமாரசுவாமி, அநாகரிக தர்மபால உள்ளிட்டவர்களும் இங்குதான் உருவாகினார்கள். பொன். அருணாச்சலம், பொன் இராமநாதன் மற்றும் ஜேம்ஸ் பீரிஸ் போன்றவர்களும் இந்தப் பாடசாலையிலேயே உருவாகினார்கள்.

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் றோயல் கல்லூரியினர் நாட்டுக்கான பணிகளை ஆற்றியுள்ளனர். இங்கு மாஷ் பூசகரை நினைவுகூர வேண்டும். அனைத்து அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்துள்ளனர். அவர்களில் சிலர் இன்றும் இங்கு உள்ளனர். டட்லி சில்வா மற்றும் போகொட பிரேமரத்ன ஆகியோரையும் நினைவுகூர வேண்டும்.

டட்லி சில்வா சிறந்த அதிபர். அவருடைய பலவீனமான பக்கங்களும் இருந்தன. அவர் ஒருமுறை எனக்கு சங்கீதம் கற்பிக் முயன்றார். அந்த முயற்சி பலனளிக்கவில்லை. போகொட பிரேமரத்ன, பியகம பகுதியில் நீடித்த இருப்பை கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவர். அவருடனான பழக்கம் பிற்காலத்தில் எனது அரசியல் வாழ்வின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது. றோயல் கல்லூரி நாட்டுக்கு பயனுள்ளவர்களை உருவாக்கிய களமாகும். இந்தப் பாடசாலைக்குள் ஆளுமையுடன் கூடியவர்கள் உருவாக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார். பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், எரான் விக்ரமரத்ன, ஹர்ஷ டி சில்வா, சி.வி.விக்னேஸ்வரன், யாதாமினி குணவர்தன, வைத்தியர் காவிந்த ஜயவர்தன ஆகியோருடன் றோயல் கல்லூரி அதிபர், முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர் குழாத்தினரும்டே மாணவர்களும் கலந்துகொண்டனர்.

### வவுனியா நகரில்...

கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினுள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அண்மையில் புதிய நிர்வாகத்தெரிவு மேற்கொள்ளப்பட்டதுடன், அதிலிருந்த ஒருபகுதியினர் அங்கிருந்து வெளியேறினர். வெளியேறிய அணியினரை வைத்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், வவுனியா மாவட்டத்துக்கான புதிய நிர்வாகத்தெரிவொன்றை மேற்கொள்வதற்காக கூட்டத்தை ஒழுங்கு செய்தனர்.

### கொடுப்பனவுளை செலுத்த...

தேவையான மருந்து விநியோகத்துக்கான மேலதிக ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ள அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும், சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியக் கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்கள், அடிப்படை வைத்தியசாலைகள் ஆகியவற்றில் நிலவும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு விரைவான தீர்வு காணும் நோக்கில் விசேட மாநாடு, சுகாதார அமைச்சர் வைத்தியக் கலாநிதி ரமேஷ் பத்திரணவின் தலைமையில் நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்று நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று (27) நடைபெற்ற போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

### KKS ஜனாதிபதி மாளிகையை...

நிலையில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரியால், தொழில்நுட்ப பூங்கா உட்பட 8 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான காணி உட்பட அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை வழங்குமாறு நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட மக்கள் பிரதிநிதிகள், ஏற்கெனவே தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளில் முறையான அனுமதிகள் எவையும் பெற்றுக்கொள்ளப்படாமல் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை, தற்போது தனியார் பல்கலைக்கழகத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாளிகை அமைக்கப்பட்டமையால், காணிகளை இழந்த பொதுமக்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை.

### குவைத்திலிருந்து 28 இலங்கையர்...

இலங்கை தூதரகத்தில் பதிவு செய்த ஒரு குழுவினரே தற்போது இலங்கையை வந்தடைந்தது. இவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்காக தூதரக அதிகாரிகள், பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் நீதித்துறையினருடன் இணைந்து பணியாற்றியிருந்தனர்.

குவைத்திலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL230 இல் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களில் 24 வீட்டுப் பணிப்பெண்களும் 4 ஆண்களும் இருந்தனர்.

இந்த பணிப் பெண்களில் ஒருவர் கர்ப்பிணியாவார். இவ்வாறு வந்தவர்களில் பெரும்பாலானோர் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் வசிப்பவர்களென தெரியவந்துள்ளது.

இந்தக் குழுவினர் தமது வசிப்பிடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்துக் கட்டணத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நேற்று செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைக்கு கடந்தப்படவிருந்த...

அட்டைகளுடன் 5 பேர் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்துக்கும் தனுஷ்கோடிக்கும் இடைப்பட்ட வடக்கு கடல் பிரதேசத்தில் இராமநாதபுரம் மண்டபத்திலுள்ள இந்திய கடலோரக் காவல் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்ட போது, கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட மண்டபத்தைச் சேர்ந்த விசைப்படகொன்றை சந்தேகத்தின் பேரில் இடைநிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் தடை செய்யப்பட்ட 50 கிலோகிராம் கடல் அட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததைத் தொடர்ந்து, கடல் அட்டைகளையும் விசைப்படகையும் இந்திய கடலோரக் காவல் படையினர் பறிமுதல் செய்ததுடன், இச்சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

### அம்பிட்டிய தேரர் குறித்து...

பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று (27) கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த சில நாட்களாக மங்களராமய அம்பிட்டிய சுமண தேரரின் பகிரங்கமான அறிக்கைகள் ஊடகங்களில் மிக அதிகளவில் விளம்பரப்படுத்தப்பட்டதை தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். அம்பிட்டிய சுமண தேரர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும் நாட்டின் தென்பகுதியில் வாழும் தமிழர்களையும் மிரட்டிச் சென்றுள்ளார்.

இது அப்பட்டமாக 2007ஆம் ஆண்டின் International Covenant on Civil and Political Rights சட்டத்தின் 56ஆம் பிரிவு 3(1) மற்றும் (2) இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தத் தேரருக்கு எதிராக பொலிஸார் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை" எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதி சபாநாயகருக்கும் ஊடகங்களுக்கும் பிரதியிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

### அம்பிட்டிய தேரரை...

தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதியை தூற்றிய இராஜாங்கனை தேரரை, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை, நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவை, International Covenant on Civil and Political Rights சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியுமாயின், தமிழ் மக்கள் மீது இனவாதக் கருத்துகளை கூறும் இவரை அரசு கைது செய்யாதா? என்பதுடன், எல்லாவற்றையும் கடந்து செல்வதைப்போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதையும் கடந்து போக முயற்சிக்கக் கூடாதெனவும், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## ஏறாவூர் புற்றுநோய் பராமரிப்பு நிலையத்துக்கு மாணவர்கள் சேமித்த பணம் வழங்கிவைப்பு

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி ஹிழுரியா வித்தியாலய மாணவர்களினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட உண்டியல்களில் சேமிக்கப்பட்ட பணம் ஏறாவூர் புற்றுநோய் பராமரிப்பு நிலையத்திற்கு மாணவர்களின் கைகளினாலேயே வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.ஐ. யாசீர் அறபாத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் "சேமிப்போம் உயிரினை காப்பாற்றுவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த 2022 ஆம் ஆண்டு சிறுவர் தினத்தில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உண்டியல்களில் சேமிக்கப்பட்ட பணம் இவ்வருடம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் சிகிச்சைக்காக கிழக்கு மாகாண புற்றுநோய் பராமரிப்பு நிலைய பொதுமுகாமையாளர் யூ. நூகுலெப்பையிடம் கையளிக்கப்பட்டது.

சுமார் 250 ற்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் தாம் உண்டியல்களில் சேமித்த பணத்தை கொண்டு வந்து நிலையப் பொறுப்பதிகாரியிடம் வழங்கியதுடன் புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டனர். இதன்போது புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு காணொளிகள் பாடசாலை மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டன. தற்பொழுது இங்கு சுமார் 35 நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகின்றது.





## மருதமுனையில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**



அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்திலுள்ள வசதிகுறைந்த பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கொத்தன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தனர். இலங்கை கல்வியமைச்சுக்கு சீன அரசாங்கத்தின் உதவியுடன் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய 270 மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

## திருகோணமலை வைத்தியசாலை பணிப்பாளராக வைத்தியர் பி.கயல்விழி நியமனம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**



திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளராக வைத்தியர் திருமதி. பி.கயல்விழி கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பதவியின் வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையிலும் திருமதி.பி.கயல்விழி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதனடிப்படையில் அவர் தனது கடமைகளை அண்மையில் (25) பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் மூதூர் தள வைத்தியசாலையின் அத்தியட்சகராகவும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். திருகோணமலை வைத்தியசாலையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் நிலவுவதாகவும் அவை சீர் செய்யப்பட்டு நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டுமெனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## கல்முனை மாநகர சபை பட்ஜட்டுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

**(கல்முனை விசேட நிருபர்)**

கல்முனை மாநகர சபையின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு கல்முனையன்ஸ் போரம் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளது.

அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் முபாரிஸ் எம்.ஹனிபா தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் பிற்பகல் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியிடம் இதனைக் கையளித்துள்ளனர். இந்நிகழ்வில் மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸியும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது குறித்த முன்மொழிவுகளை மாநகர சபை பட்ஜெட்டில் உள்வாங்கி, நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி ஆணையாளரிடம் வலியுறுத்தப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் முன்மொழிவுகளை கோரியமைக்கமைவாக கல்முனையன்ஸ் போரம் செயற்பாட்டாளர்களினால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களிடையே செயற்திறன் தரப்படுத்தலில் கல்முனை மாநகர சபை முதலாம் படிநிலைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகவும் அதற்காக ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கல்முனை மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அக்கரைப்பற்று சமுர்த்தி வங்கியால் கடனுதவி

**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

தேசிய வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று கிழக்கு சமுர்த்தி வங்கியினால் வாழ்வாதார கடனுதவிகள் வழங்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் கே.சத்தியபிரியன் தலைமையில் அக்கரைப்பற்று கிழக்கு சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 20 பயனாளிகளுக்கு 73 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார கடன்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சிறுவர் சேமிப்பு வைப்புக்களும் செய்யப்பட்டன. இதன்போது அதிதிகளாக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஃமத்துல்லாஹ், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.சீ.எம்.தஸ்லீம், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர் இசற்.ஏ.றஹ்மான், கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ. மசூர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### அக்கரைப்பற்றில்
## உயிருக்கு போராடிய காட்டு யானை இறந்தது

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன், ஒலுவில் விசேட நிருபர் நிருபர்)**



அக்கரைப்பற்று இசங்காணிச்சீமை வயல் பிரதேசத்தில் கடந்த நான்கு நாட்களாக கால்வாய்க்குள் வீழ்ந்து உயிருக்கு போராடி வந்த காட்டு யானை நேற்று முன்தினம் (26) உயிரிழந்தது. கடந்த திங்கட்கிழமை அதிகாலை வேளையில் காட்டு யானை கால்வாய்க்குள் வீழ்ந்ததாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். காலில் காயமேற்பட்டு நடக்க முடியாத நிலையில் இக்காட்டு யானை சிலநாட்கள் நடமாடி வந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த அக்கரைப்பற்று பொலிஸார், அம்பாறை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்ததையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைக்கு சிகிச்சையளித்தனர். அத்தோடு பெங்கோ இயந்திரத்தின் உதவியுடன் கால்வாய்க்குள் அகப்பட்ட யானையை மீட்பதற்கு பல மணி நேரம் முயற்சித்தும் காட்டு யானையை கால்வாயை விட்டு அப்புறப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் அதிகாலை யானை உயிரிழந்தது.

## உளவளத்துறை அறிவூட்டல் நிகழ்வு

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**



அட்டாளச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீரின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள், சமுதாய அடிப்படை சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான சமகால குடும்ப சீர்கேடு தொடர்பான அறிவூட்டல் மற்றும் உளவளத்துறை அறிவூட்டல் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமித் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வளவாளராக சிரேஷ்ட உளவள ஆலோசகர் மௌலவி அப்துல் ஹமீட் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.வி. சலீம் முகாமையாளர்களான ரீ. பரமானந்தம், ஐயூ. நபீசா, விடயத்துக்கு பொறுப்பான உத்தியோத்தர் ஏ.எஸ்.எம்.உனைஸ், வலய உதவி முகாமையாளர் அஷ்ரப் அலி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சர்ஜானா என பலரும் கலந்து கொண்டனர்.

## மூதூர் மத்திய கல்லூரி நூற்றாண்டு விழா

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று சனிக்கிழமை (28) கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.தர்ஜுன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. 1922 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு நூற்றாண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் சமூகம் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் பல்வேறு நிகழ்வுகள் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன. இதில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தலைவரும், திருமலை மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ அதிதிகளாக திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரள, எம்.எஸ்.தௌபீக், இம்றான் மஹ்றூப் ஆகியோர் கலந்து கொள்வதுடன் விசேட அதிதியாக மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் இஸட்.எம்.எம். நளீம் முனவ்வரா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்துக்கு கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீரா சாஹிப் விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் பாடசாலையின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இதன்போது பாடசாலையில் காணப்படும் தேவைகள் குறித்து கவனம் செலுத்துவதாகவும் எதிர்காலத்தில் தன்னால் முடிந்த உதவிகளை செய்து தருவதாவும் அவர் வாக்குறுதியளித்துள்ளார். இதேவேளை பாடசாலையின் தேவைகளடங்கிய மகஜரொன்றும் அதிபர் , ஆசிரியர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்; பாலமுனை தினகரன் நிருபர்)



ஸ்ரீலங்கா யுனைட்ஸ் அமைப்பு இலங்கையிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கிடையில் இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றது. அந்தவகையில் அம்பாறை ஸ்ரீலங்கா யுனைட்ஸ் நல்லிணக்க நிலையத்தில் மூவின இளைஞர் யுவதிகள் இணைந்து சரஸ்வதி பூஜை நிகழ்வொன்றினை கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்திருந்தனர்.

(படம்; மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## டெங்குநோய் பரவும் அபாயம்

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

கடும் வரட்சியான காலநிலையை அடுத்து தற்போது பருவகால மழை பெய்ய ஆரம்பித்துள்ளமையால் டெங்குநோய் பரவக்கூடிய அபாயம் நிலவுவதாக சுகாதார பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். ரிபாஸ்சின் பணிப்புரைக்கமைவாக அக்கரைபற்று சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எப்.எம்.எ.காதரின் தலைமையில் அக்கரைபற்றில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.அக்கரைபற்று சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் காதரின் அறிவுரைக்கமைய ஒவ்வொரு குழுக்களாக பிரிக்கப்பட்டு பொலிஸாரின் ஒத்துழைப்புடன் களவிஜயம் மேற்கொண்டனர்.

### கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு
## அமெரிக்க சர்வதேச சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் விஜயம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**



கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்க சர்வதேச சுகாதார அமைப்பின் பிரதிநிதியான முரளி ராமலிங்கம் மற்றும் அமைப்பின் குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தனர். வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் இவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் மூலம் உதவிகள் பெறப்பட்ட பிரிவுகளுக்கு இக்குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர். அப்பிரிவுகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வைத்தியசாலை தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### அம்பாறை மாவட்டத்தில்
## பெரும்போக நெற்செய்கைகள் ஆரம்பம்

**(இறக்காமம் தினகரன் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை 2023/2024 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்முறை இம்மாவட்டத்தில் ஒரு இலட்சத்தி 20 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணவிருக்கும் நெற்செய்கையின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒக்டோபர் 15ஆம் திகதி முதல் நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுபெற வேண்டுமென அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம சகல விவசாயிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய சேனநாயக்கா சமுத்திரத்திலிருந்து கல்லோயா வலது கரை நீர்பாசனத்தின் ஊடாக 44ஆயிரத்து 784 ஏக்கர், இடதுகரை நீர்பாசனத்தினூடாக 39 ஆயிரத்து 857 ஏக்கரிலும் ஆற்றுபாய்ச்சலின் ஊடாக 35 ஆயிரத்து 363 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

# இந்திரா புற்றுநோய் நிதியத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சி

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)



இந்திரா புற்றுநோய் நிதியம் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த புற்றுநோய் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்றைய தினம் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்கவின் ஆலோசனைக்கமைய புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.


முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் மூத்த மகளான இந்திரா ஜயசூரிய கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார். அவரின் நினைவாக இந்திரா புற்றுநோய் நிதியம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாக மக்களுக்கு இலவசமாக பாரிய சேவைகளை செய்து வருகின்றனர்.

இந்திரா புற்றுநோய் நிதியத்தின் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு உதவிகள் செய்து வருவதுடன், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு வைத்தியசாலையின் அருகாமையில் நாளாந்தம் இலவசமாக உணவு வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் சிறுவர் புற்றுநோய் தடுப்பு பிரிவு அமைத்தல் மற்றும் புற்றுநோய் குறித்து தெளிவுபடுத்தல், வறுமையான குடும்பங்களுக்கு உதவி புரிதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை இந்நிதியம் இலவசமாக செய்து வருகின்றது.

இதுகுறித்த மேலதிக தகவல்களை 0112363211 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

இந்திரா புற்றுநோய் நிதியத்தின் தலைவராக வைத்தியர் லங்கா ஜயசூரிய திசாநாயக்க செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலைச்சாரல்



## சிறுவர்களை பேணி பாதுகாப்பது பெற்றோரின் மிக முக்கிய பொறுப்பு





மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி பொ.லோகேஸ்வரி உலகமக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியினர் குழந்தைகளாக இருப்பதுடன் யுத்தம், கலவரங்கள் மற்றும் போராட்டங்கள், இயற்கை பேரழிவுகளில் சிறுவர்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி பொ.லோகேஸ்வரி தெரிவித்தார். சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தெல்தோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற சிறுவர் தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையக சமூகத்தில் குழந்தைகளின் உழைப்பே குடும்பங்களின் வாழ்வாதாரமாகவுள்ளது. எனினும் குழந்தைகளின் வாழும் உரிமை, வளர்ச்சி, பாதுகாப்பு சார்ந்த பொறுப்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், அரசாங்கத்தின் கைகளிலுள்ளது. மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகின்றது. தற்போது நான்காவது பரம்பரையினரும் லயன் அறையிலேயே வாழ்கின்றனர். நாட்டின் ஏனைய சமூகங்களிலுள்ள சிறார்களின் பெற்றோருக்கு காணி மற்றும் வீட்டுரிமை காணப்படுகிறது. ஆனால் மலையக சிறார்கள் பெரும்பாலும் லயன் அறையிலேயே வாழ்வதாக அவர் தெரிவித்தார்.

## பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு காசோலை வழங்கிவைப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)





பெருந்தோட்டப் பாடசாலைகளில் மலசலகூடம் அமைப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையில் 150,000 ரூபா முதல் 450,000 ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஹற்றன் சீடாவள நிலையத்தில் வைத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் காசோலைகளை வழங்கி வைத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமைய இந்தக் காசோலைகள் வழங்கப்பட்டன.

## சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு சந்தேக நபர்களுக்கு ரூ.1 இலட்சம் அபராதம்!

(மஸ்கெலிய தினகரன் நிருபர்)

மஸ்கெலிய பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மவுசாகல ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்தவர்களில் நால்வர் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றைய நால்வரும் தெபட்டன் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

சந்தேகநபர்களிடமிருந்து உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## நல்லதண்ணி பிரதேசத்தில் மூன்று மாணவர்கள் மாயம்

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷபான தோட்ட எமில்டன் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்கள் மூவரை காணவில்லையென நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் முறைப்பாடொன்றை பெற்றோர் பதிவுசெய்துள்ளனர்.

13,15,14 வயதுகளையுடைய நடராஜா நிலுரகஷன்,யோகராஜன், திவாகர் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவர்களை யாராவது கண்டால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.



மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தீப்பந்தம் ஏந்தி நேற்றுமுன்தினம் ஹற்றன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகாமையில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

(படம்: ஹற்றன் விசேட நிருபர்)

## சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நன்னீர் மீன் வியாபாரம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் இப்பிரதேசத்தில் நன்னீர் மீன் வியாபாரம் மீண்டும் களைகட்ட தொடங்கியுள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். நீண்டகாலமாக சமனலவெவ நீர்த்தேக்கம் வறட்சி காரணமாக நீர்வற்றிய நிலையில் காணப்பட்டது. இதனால் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்ததுடன் நன்னீர் மீன்பிடி கைத்தொழிலும் பெரும் பாதிப்பை சந்தித்தமையால் பிரதேச மக்கள் பொருளாதார ரீதியாக பின்னடைவை எதிர்நோக்கி வந்தனர்.

எனினும் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தற்போது அதிகரித்துவருவதால் தொழிற்துறை மீண்டும் செழிப்படைய ஆரம்பித்துள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

# வடக்கின் உதயம்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு



(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை இரத்த வங்கியினர் தெரிவிக்கின்றனர். விபத்துக்கள், சத்திரசிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்து செல்கின்றமையால் இரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற குருதியின் அளவும் கூடிக்கொண்டே செல்கின்றதாக இரத்த வங்கியினர் தெரிவிக்கின்றனர். இவ்வதிகரிப்பிற்கு ஏற்ப குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இதனால் இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.நாம் பல இடங்களுக்குச் சென்று குருதியை சேகரித்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் குருதியின் கையிருப்பு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

எமது இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் ஆகும். இது ஆபத்தான நிலையாகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை எம்மால் வழங்க முடியாதுள்ளது.

ஒரு அனர்த்தம் நிகழுமாயின் அதனால் ஏற்படும் குருதியிழப்பை ஈடுசெய்வதற்கு எம்மால் முடியாமல் போகலாம். ஆகவே இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு பொது மக்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துக்கு வழங்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்கல், மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றத்தை முன்வைத்தல் ஆகியவற்றுடன், பிரதேச மட்டத்திலான பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன்போது கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களில் தடைப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டன.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான கடந்த கூட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வில் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சு, விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்றிட்டங்களும் ஆராயப்பட்டன.

மேலும் வெளிநாட்டு நிதி மூலமான செயற்றிட்டங்கள், நீர்வளங்கல், மின்சாரம், போக்குவரத்து, சமுர்த்தி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் நீரியல்வள திணைக்களம், தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.





"டாக் டிக் டோஸ் " முழு நீள திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

(படம் : யாழ்.விசேட நிருபர்)

## நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரின் விளக்கமறியலை எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதிவரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டார்.

நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் மூன்று படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் கடந்த ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு ஊர்காவற்துறை நீதிமன்றில் ஒக்டோபர் 15ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டபோது நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நீதவான் கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மீனவர்களின் விளக்கமறியலை நவம்பர் 8ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார்.

## ஐ.நா பிரதிநிதிகள் இலங்கை வரும்போது வட மாகாண கடற்றொழிலாளர்களை சந்திக்கவேண்டும்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

வடக்கு மாகாணத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிகள் வரும்போது எம்மை சந்தித்து கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிய வேண்டுமென வடமாகாண மீனவர் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ். வடமராட்சி ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் க.தொ.கூ.ச.சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் வடமாகாண மீனவ பிரதிநிதியுமான அன்னலிங்கம் அன்னராசா கருத்து தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சர் கடந்த வாரம் ஐ.நா பிரதிநிதிகளை சந்தித்து இந்திய இழுவைப்படகுகளால் வடக்கு கடற்றொழில் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் விளக்கியதுடன் அதனை தடுத்து நிறுத்த இந்திய மீனவர் பிரச்சினையில் ஐ.நா தலையிட்டு தீர்வுகாண வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் கடலட்டை பண்ணைகளால் கடல்வளம் அழிக்கப்பட்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 2017 ஆம் ஆண்டு 11ம் இலக்க உள்ளூர் இழுவைமடி சட்டம் புத்தகத்தில் நடைமுறையில் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைமுறையில்லை. எனவே இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி கடற்றொழில் அமைச்சரிடம் இதனை வலியுறுத்த வேண்டும் என்பது வடக்கு மாகாண மீனவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பாகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நெற்செய்கைக்கான பங்கீட்டு கூட்டம்

(ஓமந்தை விசேட நிருபர்)

வவுனிக்குளம் காலபோக நெற்செய்கைக்கான பங்கீட்டு கூட்டமானது நேற்று நடைபெற்றது. வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் காலை வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தினகரன் வர்த்தக உலா

# Fashion Bug 'ரூ சித்தம் 2023' சிறப்பான முறையில் வெற்றிகரமாக நிறைவு

இலங்கையில் முன்னணி பேஷன் விற்பனையகமான Fashion Bug, தொடர்ச்சியாக 13ஆவது வருடமாக ரூ சித்தம் (Roo Siththam) 2023 என்ற தனது அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியை அண்மையில் நிறைவு செய்தது. பிஷப்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த கண்கவர் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதி திரு.சந்தன சூரியபண்டார மற்றும் கௌரவ அதிதிகளான திரு.பர்வீஸ் மஹரூப் மற்றும் கலாநிதி ஹயேஷிகா பெர்னாண்டோ உட்பட பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து சிறப்பித்தனர். விழாவில் 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் 250க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



ரூ சித்தம் 2023 இன் எண்ணக்கருவாக "என் உலகம், என் கண்கள் மூலம்", இது நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை தங்கள் படைப்பு திறன்களைச் சமர்ப்பிக்க உந்துசக்தியாக இருந்தது. 7 முதல் 9 வயது வரை, 10 முதல் 12 வயது வரை மற்றும் 13 முதல் 16 வயது வரையிலான மூன்று வயதுப் பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றதுடன் , 81,246 இளம் கலைஞர்கள் தங்கள் இதயங்களையும் ஆன்மாவையும் தங்கள் படைப்புகளில் இலயிக்கச் செய்து, உலகம் பற்றிய தங்கள் தனித்துவமான கண்ணோட்டங்களை வெளிப்படுத்தினர்.

ரூ சித்தம் 2023 போட்டியானது கல்வி அமைச்சின் அனுமதி மற்றும் மேற்பார்வையுடன் நடாத்தப்பட்டது, இது நிகழ்வின் மிகுந்த நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு உத்தரவாதம் அளிக்கிறது. Visual and Performing Arts பல்கலைக்கழகத்தின் முக்கிய விரிவுரையாளர்கள் நடுவர்களாக திகழ்ந்தமை, மதிப்பீடு செயல்முறை நியாயமானதாகவும் திறமையாகவும் நடாத்தப்படுவதை உறுதிசெய்தது.

பரந்த அளவிலான திறமையாளர்களில், மொத்தம் 272 வெற்றியாளர்களின் படைப்புக்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு, அவர்களின் விதிவிலக்கான கலைப்படைப்புக்காக பாராட்டுகளையும் அங்கீகாரத்தையும் பெற்றனர்.



Coke Kottu Beat Partyஇன் அடுத்த கட்டத்திற்கு தயாராகுங்கள்! நாட்டின் 6 இடங்களில் 125,000க்கும் மேற்பட்ட ரசிகர்களை ஒன்றிணைத்த Coke Kottu Beat Party, கொழும்பு, மஹரகம நாவின்ன மைதானத்தில் இடம்பெற்றது. Umaria, Wasthi, Centigradz, Hana Shafa மற்றும் MidLane Band ஆகியோரின் அற்புதமான இசைக்கலைஞர்களின் பங்களிப்போடு, CocaColaவுடன் இணைந்து, பல்வேறு வகையான கொத்துகளை சுவைத்து மகிழ்ந்தனர். நுழைவாயிலில் CocaCola, Sprite, Fanta Orange, Fanta Portello அல்லது Fanta Cream Sodaவின் லேபிளை காண்பித்து இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள முடியுமாக இருந்தது.

# 'சுதேஷி கொஹொம்ப' புலமைச் சொத்துரிமைகளை மீறியதற்காக தடை உத்தரவைப் பெற்ற சுதேசி

கடந்த 8 தசாப்தங்களாக சுதேசி கொஹொம்ப உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துனருமான சுதேசி இண்டஸ்ட்ரியல் வோர்க்ஸ் பிஎல்சி நிறுவனம், அதன் தயாரிப்பு தொடர்பான புலமைச் சொத்துரிமைகளை மீறியமைக்காக Dasun Consumer Products (Pvt) Ltd. நிறுவனத்திற்கு எதிராக பல்வேறு தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளது. இது Dasun Consumer Products Pvt. Ltd. தனது தயாரிப்புகளில் சுதேசி கொஹொம்பவின் புலமைச் சொத்துரிமைகளை மீறுவதற்கு எதிராக வழங்கப்பட்டுள்ளது. Dasun Consumer Products Pvt. இற்கு எதிராக அறிவுசார் சொத்துரிமைகளை மீறுவதைத் தடுக்கும் தடை உத்தரவுகளை, 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் இந்த தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.



சுதேசி கொஹொம்ப வர்த்தக முத்திரையின் பெருமைக்குரிய உரிமையாளராக சுதேஷி இண்டஸ்ட்ரீஸ் விளங்குகின்றது. 'சுதேஷி கொஹொம்ப' கடந்த எட்டு தசாப்தங்களாக மூலிகை சவர்க்காரம் மற்றும் மூலிகை தனிநபர் பராமரிப்பு பிரிவில் சந்தையில் முன்னணியில் திகழ்கிறது.

இவ்வழக்கில் சுதேசி இன்டஸ்ட்ரியல் வோர்க்ஸ் பிஎல்சி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ் டி சில்வா, வசந்தகுமார் நைல்ஸ் ஆகியோர் ஆஜராகியிருந்ததோடு, சட்டத்தரணி சனத் விஜேவர்தனவினால் சட்ட உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இணையப் பாதுகாப்பு தீர்வு துறையில் சிறந்த பங்காளியாக Eguardian இனால் அங்கீகரிக்கப்பட்ட Softlogic

அண்மையில் The Eguardian Partner Conference 2023 நிகழ்வில் மதிப்புமிக்க 'Eguardian Partner of the year Large and Medium Business Partner Sri Lanka' விருதை Softlogic Information Technologies (SITL) வென்றுள்ளது. இந்த கௌரவிப்பானது, இணையப் பாதுகாப்பு தொடர்பான மூன்று தசாப்த கால நீண்ட பயணத்தில், நிறுவனம் கொண்டுள்ள குறிப்பிடும்படியான முன்னேற்றம் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக விளங்குகிறது.



இது நிறுவனத்தின் ஒப்பிட முடியாத வளர்ச்சியை கோடிட்டுக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், அவர்களது வெற்றிக்கு உந்துசக்தியாக இருந்த, அவர்களது இடைவிடாத முயற்சியையும் அர்ப்பணிப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

செப்டெம்பர் 16ஆம் திகதி இடம்பெற்ற Eguardian Partner Conference 2023 நிகழ்வானது, இலங்கையின் டிஜிட்டல் அரங்கில், குறிப்பாக இணையப் பாதுகாப்புத் துறையில் ஒரு குறிப்பிடும்படியான மைல்கல்லாக அமைந்தது. தொழில் வல்லுநர்கள், செல்வாக்கு மிக்க தலைவர்கள், சிறந்த IT நிறுவனங்களின் வல்லுநர்கள் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன், அறிவைப் பகிர்வதற்கும், கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும், தொழில்நுட்பத் துறையில் முக்கியத்துவமான தனித்துவமான இலக்குகளைப் பின்பற்றுவதற்கும் ஒரு மையமாக இந்த நிகழ்வு அமைந்தது.

# JICA இலங்கையின் நிலையான சமூக பொருளாதார அபிவிருத்திக்காக HNB உடன் கைகோர்க்கிறது

இலங்கையின் நிலையான சமூகபொருளாதார அபிவிருத்திக்காக, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB உடன் கைகோர்த்துள்ளது.



இந்த கூட்டாண்மை மூலம், JICA, ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித் திட்டம் (ODA) செயல்படுத்தும் முகவர், HNB இன் பரந்த அளவிலான நிபுணத்துவம் மற்றும் அதன் விரிவான கிளை மற்றும் வாடிக்கையாளர் வலையமைப்பைப் பயன்படுத்தி, அதன் விரிவான அனுபவத்தை நீண்ட கால மேம்பாட்டு பங்காளியாக மேம்படுத்துகிறது. நிதிப் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலையான நடைமுறைகளை வளர்க்கும் முன்முயற்சிகள் மூலம் அவர்கள் சமூக சவால்களை எதிர்கொள்வார்கள். விவசாயம், பால் உற்பத்தி, விநியோகச் சங்கிலி நிதியுதவி, பெண்களுக்கு சுயதொழில் ஆரம்பிக்க உதவுதல், மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற துறைகளில் கவனம் செலுத்துவதை இந்தக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கும் அத்தியாவசிய சமூக பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கும் உதவும் வணிகங்கள் மற்றும் திட்டங்களில் இந்த கூட்டாண்மை கவனம் செலுத்தும்.

# 10 சர்வதேச வங்கிகளிடமிருந்து 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை மீள்முதலிடும் Adani Cement

சர்வதேச வங்கிகளிடமிருந்து திரட்டப்பட்ட 3,500 மில்லியன் டொலர் நிதி மூலம், Endeavour Trade and Investment Ltd ஊடாக, Ambuja மற்றும் ACC இற்காக கையகப்படுத்தப்பட்ட கடனுக்கான அதன் மீள் நிதியளிப்பு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதை அறிவிப்பதில் Adani Cement மகிழ்ச்சி அடைகிறது. இது உலகளாவிய நிதிச் சந்தைக்கான அதானியின் வலுவான அணுகல் மற்றும் வலுவான பணப்புழக்க நிலையைக் காட்டுகிறது. சாதனை நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான அதன் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது. இந்த வசதியளிப்பின் மூலம் Adani Cement நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலவில் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீதப்படுத்தப்படும்.

Adani Cement இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரும் சீமெந்து உற்பத்தி நிறுவனமாகும். Ambuja மற்றும் ACC (இந்தியாவின் இரண்டு முக்கிய வர்த்தக நாமங்கள்) ஆகிய சீமெந்து நிறுவனங்களின் 6.6 பில்லியன் டொலர் மூலமான கையகப்படுத்தலை Adani Cement அண்மையில் நிறைவு செய்திருந்தது. உட்கட்டமைப்பு மற்றும் மூலப் பொருள் துறையில் மிகப்பெரிய கையகப்படுத்தலான இது, கடந்த செப்டெம்பர் 22 இல் நிறைவு செய்யப்பட்டது. இந்த 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் வசதியானது, செப்டெம்பர் 2022 இல் திட்டமிடப்பட்ட மூலதன முகாமைத்துவத் திட்டத்தைத் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுவதைக் காண்பிக்கிறது.



# '60 நாட்களில் இலங்கையை சுற்றி யூனிலீவர்' இலங்கை பல்கலைக்கழகங்களில் பயிலும் இளைஞர்களுக்கான முயற்சி

2025 ஆம் ஆண்டுக்குள் 100,000 இலங்கை இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான பயணத்தில் யூனிலீவர் ஸ்ரீலங்கா ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில், செப்டெம்பர் 2023 முதல் '60 நாட்களில் இலங்கையை சுற்றி யூனிலீவர்' பிரசாரத்தை அது முன்னெடுத்துள்ளது. இது, எதிர்வரும் 60 நாட்களில் பயிலுனர் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் திறன்களை வழங்குவதை மையமாகக் கொண்டு, எதிர்கால தொழில் உலகில் முன்னேற அவர்களைத் தயார்படுத்தும். யூனிலீவரின் இலங்கையைச் சுற்றிய பயணத்தின் முதலாவது நிறுத்தமானது, Asia Pacific Institute of Information Technology (APIIT) இல் இடம்பெற்றது.

இங்கு, யூனிலீவர் ஸ்ரீலங்காவின் வீட்டு பராமரிப்பு தயாரிப்புப் பிரிவு தலைவரும் அதன் முகாமைத்துவ குழு உறுப்பினருமான கயான் ரூபசிங்க தலைமையில் #KathaBaha எனும் தலைப்பில், பயிலுனர் பட்டதாரிகளுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு வழங்கப்பட்டது. கயான் இங்கு தனது தொழில் வாழ்க்கை பயணம் தொடர்பான நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார்.



ஆர்வமுள்ள மாணவர்களுக்கு விலை மதிப்பிட முடியாத தகவல்களையும் படிப்பினைகளையும் அவர் வழங்கினார். அத்துடன், இந்நிகழ்வில் யூனிலீவர் ஸ்ரீலங்காவின் கற்றல் மற்றும் மனித வள மூலோபாயத்தின் முன்னணி அதிகாரியான அஞ்சலி ஜயதுங்க, நிபுணத்துவத்துடன், 'உங்கள் நோக்கத்தைக் கண்டறிதல்' எனும் அறிவூட்டும் அமர்வை மேற்கொண்டார்.

அஞ்சலியின் வழிகாட்டலானது, மாணவர்களின் நோக்கங்களைக் கண்டறிய உதவுவதில் முக்கிய பங்கு வகித்தது. இந்த அமர்வின் மூலம், மாணவர்கள் தங்கள் இலக்குகளை ஒரு வலுவான நோக்கத்துடன் இணைக்கத் தயாராகினர்.

# இலங்கையின் கல்வித் துறையின் எதிர்காலத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும் APIIT

இலங்கையின் கல்வித் துறையில் முன்னோடியான மைல்கல்லொன்றை Asia Pacific Institute of Information Technology (APIIT) அறிமுகப்படுத்தியுள்ளது. இது செயற்கை நுண்ணறிவின் (AI) ஆற்றலை பிரதானமாகக் கொண்டு மாணவர்களை வலுவூட்டும் புரட்சிகரமான பிரசாரமாகும்.

இந்த புத்தாக்கம்மிக்க பிரசாரத்தின் மூல எண்ணக்கருவான எதிர்கால தலைவர்களுக்கு ஊக்கமளித்தல் என்பதும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டதொன்றென்பதுடன், இது மாற்றங்களுடன் கூடிய கல்வி அனுபவத்தை வழங்குமென்பதனை உறுதியளிக்கின்றது. தமது சமூகங்களில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் தலைவர்களை உருவாக்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிக்க மாணவர்கள் வலுவூட்டப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை APIIT வலியுறுத்துகின்றது.

டிஜிட்டலுக்கு முன்னுரிமையளிக்கும் இந்த சகாப்தத்தில், மாணவர் உள்ளீர்ப்பு செயன்முறையை மீள்வரையறை செய்ய APIIT முன்வந்துள்ளது. இந்த முழுப் பிரசாரமும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் மூலம் APIIT இன் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இது 100% செயற்கை நுண்ணறிவினால் (AI) உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தால் வலுவூட்டப்பட்ட முழுமையான உள்ளீர்ப்பு பிரசாரமே இந்த அர்ப்பணிப்புக்கான சான்றாகும். இம் முயற்சியானது தொழில்நுட்ப வல்லமையைப் பற்றியது மட்டுமல்ல என்பதுடன், இது APIIT மாணவர்கள் அவர்களது எதிர்கால தொழில்சார் பாத்திரங்களில் தம்மை உருவகித்துப் பார்க்க வழி வகுக்கின்றது. அதிநவீன செயற்கை நுண்ணறிவு உருமாற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்த பிரசாரமானது ஒவ்வொரு மாணவரதும் அவர்களது எதிர்கால அவதார்களை உருவாக்குகிறது. இந்த அவதார்கள் உத்வேகத்தின் அடையாளமாகத் திகழ்வதுடன், மாணவர்கள் தமது எதிர்கால தொழில்சார் பாத்திரத்தை உருவகித்து அவற்றை தனித்துவமான பிரசார ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

# இங்கிலாந்து அணி எம்மை குறைத்து மதிப்பிட்டதாகக் கூறுகிறார் தீக்ஷன

உலகக் கிண்ண நடப்புச் சம்பியன் இங்கிலாந்து தமது அணியை குறைத்து மதிப்பிட்டதாக இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற தீர்க்கமான போட்டியில் இங்கிலாந்து அணியை 34 ஓவர்களுக்குள் 156 ஓட்டங்களுக்கு சுருட்டிய இலங்கை அணி அந்த இலக்கை 146 பந்துகளை மிச்சம் வைத்து 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து எட்டியது.

ஜோஷ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தில் இதுவரை ஆடிய ஐந்து போட்டிகளில் நான்கில் தோல்வி அடைந்து அரையிறுதி வாய்ப்பை இழக்கும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

“நாம் மூன்று போட்டிகளில் தோற்று நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்றிருந்ததால் அவர்கள் எம்மை குறைத்து மதிப்பிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.” என்று போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தீக்ஷன தெரிவித்தார்.

“ஒரு சாதாரண திட்டத்துடன் எமது பலத்தை காண்பித்ததன் காரணமாகவே போட்டி முடிவு எமக்கு சாதகமாகக் கிடைத்தது. எனவே அது தான் நாம் வெற்றிபெறக் காரணம்” என்று அவர் கூறினார்.

மர்மப் பந்துவீச்சாளராக அழைக்கப்படும் தீக்ஷன இந்தப் போட்டியில் 21 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். “இதுவரை நாம் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பதன் காரணமாக எமது நம்பிக்கை அதிகரித்துள்ளது. இந்தப் போட்டி எமக்கு மகிழ்ச்சிகரமான முடிவைத் தந்தது.




அணி ஒன்றாக எதிர்வரும் நான்கு போட்டிகளிலும் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேற நாம் எதிர்பார்க்கிறோம்” என்று தீக்ஷன நம்பிக்கையை வெளியிட்டார்.

வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பத்தும் நிசங்க (77) மற்றும் சதீர சமரவிக்ரம (65) துடுப்பாட்டத்தில் சோபித்தனர். இருவரும் பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 137 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

எனினும் முன்னாள் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அணிக்கு திரும்பியது இந்த வெற்றிக்கு பெரும் உதவியாக இருந்தது.

காயத்துக்கு உள்ளான மதீஷ பதிரணவுக்கு பதிலாகவே மத்தியூஸ் இலங்கை அணிக்கு திரும்பினார். இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மத்தியூஸ் முதல் விக்கெட்டாக 38 ஓட்டங்களுடன் இருந்த டேவிட் மாலனின் விக்கெட்டை சாய்த்தார். தொடர்ந்து மொயின் அலியை 15 ஓட்டங்களுடன் வீழ்த்தினார்.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அணிக்காக 106 டெஸ்ட் மற்றும் 222 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் அஞ்சலோ மத்தியூஸ் தான் வீசிய ஐந்து ஓவர்களுக்கும் 14 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்ததோடு அதில் ஒரு ஓட்டமற்ற ஓவரும் அடங்கும்.

“மிக அனுபவம் பெற்ற வீரர் ஒருவர் அணியுடன் இணைந்திருப்பது எமக்கு மிக மகிழ்ச்சியானது. அவர் இந்தியாவில் ஆடியிருக்கிறார். அவரிடம் இருந்து நாம் அதிகம் கற்க வேண்டும்” என்று சகலதுறை வீரரான மத்தியூஸ் பற்றி தீக்ஷன குறிப்பிட்டார்.

“நாம் பந்துவீசிய போது அவரது அனுபவத்தை நாம் போட்டியில் பயன்படுத்தினோம். அணியில் அவ்வாறான அனுபவ வீரர் ஒருவர் இருப்பது ஒட்டுமொத்த அணிக்கும் மிக மகிழ்ச்சியானதாகும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

1996 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை, 10 அணிகள் பங்கேற்றிருக்கும் இம்முறை உலகக் கிண்ணத்தில் ஐந்து போட்டிகளில் தனது இரண்டாவது வெற்றியை பெற்றுள்ளது.

## லங்கா டி20 தொடரில் பங்ளா அணி இணைவு

அபூதாபி டி10 லீக் தொடரில் இடம்பெற்ற பங்களாதேஷைச் சேர்ந்த கிரிக்கெட் அணியான பங்ளா டைகர்ஸ் லங்கா டி10 கிரிக்கெட் தொடரிலும் இடம்பெறுவதாக அறிவித்துள்ளது.

புதிய யுகம் ஒன்றில் காலெடுத்து வைக்கும் வகையில் இலங்கை தீவிலும் தமது அணி ஆடவிருப்பதாக பங்ளா டைகர்ஸ், முன்னர் ட்விட்டர் என அறியப்பட்ட எக்ஸ் சமூகதளத்தில் அறிவித்துள்ளது.

லங்கா டி10 தொடரில் அந்த அணி பங்ளா டைகர்ஸ் ஹம்பாந்தோட்டை என்ற பெயரில் களமிறங்கவுள்ளது.

பிராந்திய கிரிக்கெட் மையங்களை உள்ளடக்கியதாக லங்கா டி10 தொடரில் ஆறு ஆடவர் அணிகள்




மற்றும் நான்கு மகளிர் அணிகள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு அணியிலும் ஆறு வெளிநாட்டு வீரர்களுடன் 16 வீரர்கள் இடம் பெறுகின்றனர். முதலாவது லங்கா டி10 தொடர் எதிர்வரும் டிசம்பர் 12 தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## ஆசிய பாரா விளையாட்டுப் போட்டி: இலங்கைக்கு மேலும் இரு வெள்ளி

சீனாவின் ஹான்சு நகரில் இடம்பெற்று வரும் ஆசிய பாரா விளையாட்டுப் பேட்டியில் இலங்கை மேலும் இரு பதக்கங்களை வென்றுள்ளது.

இலங்கையின் அனில் பெரேரா நேற்று (27) நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் (டீ63) போட்டியில் 12.98 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து இரண்டாவது இடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.



இலங்கை பாரா தடகள வீரர் நுவன் இந்திக்க ஆண்களுக்கான நீளம் பாய்தல் (டீ64) போட்டியில் மற்றொரு வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன்படி இம்முறை ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் இலங்கை இதுவரை மொத்தமாக எட்டுப் பதக்கங்களை வென்றுள்ளது. இதில் இரு தங்கம், நான்கு வெள்ளி மற்றும் இரு வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.

இதில் சீனா பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் இருப்பதோடு இலங்கை 33 நாடுகள் போட்டியிட்டிருக்கும் இந்த விளையாட்டு விழாவில் 18 ஆவது இடத்தில் உள்ளது.

## பாண்டியா தொடர்ந்து சிகிச்சை




உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியின் போது கணுக்காலில் காயம் அடைந்த இந்திய அணியின் சகலதுறை வீரரும் உப தலைவருமான ஹர்திக் பாண்டியா ஓய்வில் உள்ளார்.

பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் (என்சிஏ) நிதின் படேலின் தலைமையிலான மருத்துவக் குழு அவரை கண்காணித்து வருகிறது. ஆனால் காயம் முதலில் உணரப்பட்டதை விட சற்று தீவிரமாக உள்ளது. அவர் சிறிய தசைநார் கிழிவால் பாதிக்கப்பட்டிருப்பது போல் தெரிகிறது. அது குணமடைய குறைந்தது இரண்டு வாரங்கள் ஆகும். அவரது காயம் குணமாகும் முன் என்சிஏ அவரை விடுவிக்காது.

விரைவில் அவரை மீண்டும் ஆடுகளத்தில் பார்ப்போம் என்று நம்புவதாக மருத்துவக் குழு அணி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளது. இதனால் மாற்று வீரரை அணியில் சேர்க்க விரும்பவில்லை. பாண்டியாவுக்காக காத்திருக்க அணி நிர்வாகம் தயாராக உள்ளது. அரையிறுதி போட்டிக்கு முன் அவர் அணிக்கு திரும்புவார் என தெரிகிறது. ஒருவேளை அவர் விளையாட முடியாமல் போனால் அக்சர் பட்டேல் சேர்க்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

## இலங்கை வளர்ந்துவரும் அணியினர் 298 ஓட்டம்

பங்களாதேஷ் வளர்ந்துவரும் அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸை ஆடிவரும் இலங்கை வளர்ந்துவரும் அணி மூன்றாவது நாளான நேற்று ஆட்டநேர முடிவின்போது 7 விக்கெட் இழப்புக்கு 298 ஓட்டங்களை பெற்றுள்ளது.

தம்புள்ளையில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் பங்களாதேஷ் வளர்ந்துவரும் அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 501 ஓட்டங்களை பெற்றது. இதன்போது ஆரம்ப வீரர் அயிச் முல்லா 147 ஓட்டங்களை பெற்றதோடு அணித்தலைவர் மஹ்மூதுல்லா ஹசன் ஜோன் (66), ஷஹதாத் ஹொஸைன் (93) மற்றும் பிரோட் குமார் (69) சிறப்பாக செயற்பட்டனர்.

பங்களாதேஷ் வளர்ந்துவரும் அணி 126.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 501 ஓட்டங்களை பெற்ற நிலையிலேயே தனது முதல் இன்னிஸை இடைநிறுத்தியது. இதன்போது இலங்கை வளர்ந்துவரும் அணி சார்பில் வேகப்பந்து வீச்சாளர் எஹசான் மாலிங்க 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை வளர்ந்துவரும் அணி சார்பில் ஆரம்ப வீரர் நவோத் பரணவிதான 188 பந்துகளில் 36 பௌண்டரிகளுடன் 136 ஓட்டங்களை பெற்றதோடு அணித் தலைவர் சொனால் தினுஷவும் சதம் பெற்றார். இன்று போட்டியின் கடைசி நாளாகும்.

## பங்களாதேஷ் பீரிமியர் லீக்கில் குசல் ஒப்பந்தம்

எதிர்வரும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் பருவத்தில் சட்டொக்ராம் சலஞ்சர்ஸ் அணியில் ஆட இலங்கை விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸ் ஒப்பந்தமாகியுள்ளார். இதனை அந்த அணி தனது பேஸ்புக் பக்கத்தில் உறுதி செய்துள்ளது.

இலங்கை அணிக்காக நீண்ட காலமாக ஆடிவரும் குசல் மெண்டிஸ், தசுன் ஷானக்கவின் காயம் காரணமாக அணித் தலைமை பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

ஆரம்ப வரிசையில் அதிரடியாக ஆடக் கூடியவரான அவர்




குறிப்பாக பங்களாதேஷுக்கு எதிராக சிறப்பாக செயற்பட்டு வருகிறார்.

எனினும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் தேர்வு கடந்த செப்டெம்பர் 24 ஆம் திகதி நிறைவடைந்திருந்து.

இதில் மூத்த வீரர்களான ஷுவகதா ஹோம், சவுர் ரஹ்மான், நிஹாதுஸ்ஸமானை சட்டொக்ராம் அணி தக்கவைத்துள்ளது.

அடுத்து பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் 2024 ஜனவரியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சம்மாந்துறை கழகம் சம்பியன்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் கிழக்கு மாகாணத்தில் 24 அணிகளை கொண்டு நடத்திய சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் சம்மாந்துறை விளையாட்டு கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகத்திற்கும், சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் 5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக்கழகம் 5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 28 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

## ஐ.பி.எல் வீரர்கள் ஏலம் டிசம்பர் 19இல் டுபாயில்

2024 ஆம் ஆண்டுக்கான இந்திய பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் டிசம்பர் 19 ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. இந்த வீரர் ஏலம் இந்தியாவுக்கு வெளியில் நடைபெறவுள்ளது இது முதல்முறையாகும்.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஆடும் அதே தினத்திலேயே இந்த வீரர்கள் ஏலம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல் அணிகள் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி வரை தமது அணியில் தக்கவைக்கும் மற்றும் அணியில் இருந்து விடுவிக்கும் வீரர்களின் பட்டியலை சமர்ப்பிக்க முடியும். 2024 பருவத்திற்காக தமது அணியை கட்டியெடுப்புவதற்கு ஒவ்வொரு அணிக்கும் இந்திய நாணயப்படி 100 கோடி ரூபா செலவிட அனுமதிக்கப்படுகிறது. இது கடந்த ஆண்டை விட 5 கோடி ரூபா அதிகரிப்பாகும்.

## அல்–ஹமாஸ் றோயல் வெற்றி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**




ஹொரவப்பொத்தான அல்லவெவ யூத் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரில் அல்–ஹமாஸ் றோயல் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அல்லவெவ முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் (22) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அல் ஹமாஸ் றோயல் அணி பெல்லன்கடவல அணியை வீழ்த்தியது.

இந்தத் தொடரில் 30 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடரின் ஆட்ட நாயகனாகவும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராகவும் அல் ஹமாஸ் றோயல் அணியின் என்.எம். அசாம் தெரிவானார்.